பக்கங்கள்: பத்து
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 03 வெள்ளிக்கிழமை (15-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:82

## அத்துருகிரிய வீடு முற்றுகைச் சம்பவம்; முழு விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு!

கொழும்பு,பெப்.15

அத்துருகிரியவில் இராணுவத்தின் பாதுகாப்பில் இருந்த வீடு ஒன்றில் பொலீஸார் நடத்திய முற்றுகை தொடர்பாக பூரண விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவை ஜனாதிபதி பணித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சருக்கு ஜனாதிபதி உத்தரவுக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

சர்ச்சைக்குரிய இந்த ரகசிய முற்றுகை ஏன், எதற்காக நடத்தப்பட்டது என்பது தொடர்பாக அறிக்கைமூலம் தனக்கு விளக்கமளிக்குமாறு அந்தக் கடிதத்தில் ஜனாதிபதி கேட்டிருக்கிறார்.

பொலீஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல தலைமையிலான பொலீஸ் குழு ஒன்று கடந்த ஜனவரி 2 ஆம் திகதி அத்துருகிரியவில் உள்ள குறிப்பிட்ட வீட்டை முற்றுகையிட்டு சோதனை நடத்தியதும் -

அங்கிருந்து ஒருதொகை நவீன ஆயுத உபகரணங்களை கைப்பற்றியதும் -

தெரிந்ததே.

இந்தச் சம்பவம் தொடர்பாக பின்னர் தமிழ்க் குழு ஒன்றில் இருந்து வெளியேறி இராணுவத்தில் இணைந்த ஒருவர் உட்பட படையினர் 6 பேரை பொலீஸார் கைதுசெய்திருந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை கொலை செய்வதற்காகவே அவர்கள் ஆயுதங்களுடன் அந்த வீட்டில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பி பதவியை ஏற்பதற்காக மதனராஜன் கொழும்புக்கு!

யாழ்ப்பாணம்,பெப்.15

நாரந்தனையில் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கின் இரண்டாவது எதிரியான என்.மதனராஜன் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் செய்வதற்காக கொழும்பு செல்ல யாழ்நீதிமன்றம் நிபந்தனையுடன் அனுமதித்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் ஈ.பி.டி.பி. சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட மதனராஜன் நாரந்தனைச் சம்பவம் தொடர்பான வழக்கில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால், அவர் சத்தியப் பிரமாணம் செய்யவில்லை.

இந்த வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்ற சமயம் எதிர்வரும் 18 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது பதவிப்பிரமாணம் செய்ய விரும்புவதாகவும் -

அதற்காக கொழும்பு செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் -

நீதிமன்றத்தில் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள விசாரணையில் நான்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

### நோர்வேயின் சமாதான முயற்சிகள்

# எச்சரிக்கையுடன் கூடிய நம்பிக்கை; ஜனாதிபதியின் நிலைப்பாடு இதுவே

## அவரது பேச்சாளர் தகவல்

கொழும்பு,பெப்ரவரி15

**இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக நோர்வே அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எச்சரிக்கையுடன் கூடிய நம்பிக்கையோடு நோக்குகின்றார்.**

**நாட்டினதும் ஏனைய இனக்குழுக்கள் எதிரணி அரசியல் கட்சிகளின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் என்பன குறித்து ஜனாதிபதி ஆழ்ந்த கவலை கொண்டுள்ளார்.**

ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டை அவரது பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான முயற்சிகள் தற்போது ஆரம்பகட்டத்தில் இருப்பினும்கூட ஜனாதிபதி அதன் மீது நம்பிக்கை கொண்டுள்ளார். அதே அளவுக்கு எச்சரிக்கையுடனும் அவர் அதனை நோக்குகின்றார்.

சமாதான முன்னெடுப்புகள் சரியான பாதையில் நகர்கின்றனவா என்பதை ஜனாதிபதி இடைவிடாமல் கண்காணிக்கிறார்.

சமாதான முயற்சி குறித்து ஜனாதிபதியும் பிரதமரும் தொடர்ந்து கருத்துக்களைப் பரிமாறி வருகின்றனர். தேசிய பாதுகாப்புச் சபையின் ஒவ்வொரு கூட்டத்தின் பின்னரும் இரு தலைவர்களும் கருத்துப் பரிமாறுகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வுகாணவேண்டும் என்ற ஜனாதிபதியின் முடிவில் எந்தவித மாற்றமும் கிடையாது. எனினும் தேசியப் பாதுகாப்புக் குறித்து அவர் கவலை கொண்டுள்ளார்.

வடக்கு - கிழக்கில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து அதிலும் விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கும் விடயத்தில் ஜனாதிபதி ஆழ்ந்த கவனம் செலுத்துகின்றார். முஸ்லிம் மக்களின் உரிமைகள் குறித்தும் அவர் கவனத்தில் கொண்டுள்ளார்.

பலாத்காரமாக ஆட்களைச் சேர்க்கும் புலிகளின் செயல்கள் கடந்த வாரங்களில் வீழ்ச்சி கண்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன - என்று ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவித்தார்.

நிரந்தர யுத்தநிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஜனாதிபதி கைெயாப்பம் இடுவாரா என்று செய்தியாளர் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதில் அளித்து அவர் கூறியதாவது:-

இந்த உடன்பாட்டில் இரு விடயங்களை அவதானிக்க வேண்டும்.

ஒன்று - உடன்பாடு சட்டரீதியான

(10ஆம் பக்கம் பார்க்க)

### அக்கரைப்பற்று, திருக்கோவில் பகுதிகளில் பதற்றம்

## தமிழர்-முஸ்லிம் கலவரத்துக்கு கிழக்கில் சில சக்திகள் தூபம்!

மட்டக்களப்பு,பெப்.15

அக்கரைப்பற்று, திருக்கோயில் பகுதியில் நேற்று தமிழர்கள் அனுஷ்டித்த ஹர்த்தாலை அடுத்து அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவியதாகச் செய்திகள் தெரிவித்தன.

அக்கரைப்பற்று ஆலங்குளம் என்னும் இடத்தில் தமிழ்ப் பெண் ஒருவர் ஓட்டோ சாரதி உட்பட ஐவரால் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தின் எதிரொலியாகவே அங்கு பரவலாக வன்செயல்கள் வெடித்தன.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. இதனால் அக்கரைப்பற்று, திருக்கோயில் பகுதிகளில் தமிழ் மக்களின் கடைகள் மூடப்பட்டன.

வீதிகளில் டயர் போட்டு எரிக்கப்பட்டு போக்குவரத்துக்கள் தடைசெய்யப்பட்டன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு உடன்படிக்கையின் விவரங்கள் கசிந்தது எப்படி?

கொழும்பு,பெப்.15

நிரந்தர யுத்தநிறுத்தத்துக்கு வழி செய்யும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் இடம்பெறக்கூடிய விடயங்கள் கசிந்துவிட்டதால் நோர்வேத் தரப்பு அதன் சமாதான முயற்சிகளில் எதிர்ப்புகளையும், பின்னடைவுகளையும் சந்திக்க நேரிட்டுள்ளதா?

இது தொடர்பாக இணையத்தளம் ஒன்றில் நேற்று வெளியான செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இரண்டு தசாப்தகால உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் அரசும், விடுதலைப் புலிகளும் பேச்சில் ஈடுபடுவதற்காக ஏற்படுத்தப்படவுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் அம்சங்கள் இலங்கை அரசியல் தலைவர்களின் பார்வைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் வெளிநாட்டு, உள்ளூர் ஊடகங்களில் அவை குறித்த செய்திகள் கடந்த வாரம் வெளியிடப்பட்டன.

இதனைத் தொடர்ந்து தென்னிலங்கையில் வாழும் பெரும்பான்மையினர் மத்தியில் புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்த கவலை எதிரொலித்தது.

உத்தேச உடன்படிக்கை கட்சிகளிடம் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் -

அதில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## 1,200 சிங்களக் குடும்பங்களையும் குடாநாட்டில் மீளக் குடியமர்த்துக!

### வீரவிதான அமைப்பு கோரிக்கை

கொழும்பு,பெப்.15

குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த ஏற்பாடு செய்யும்போது - அங்கிருந்து முன்னர் இடம்பெயர்ந்த ஆயிரத்து 200 சிங்களக் குடும்பங்களையும் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படிக் கோரிக்கை விடுத்துள்ளது சிங்கள வீரவிதான அமைப்பு.

புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே மேற்கண்டவாறு அந்த அமைப்புக் கோரியுள்ளது.

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கையை வரவேற்கிறோம். குடாநாட்டில் முன்னர் நீண்ட காலம் வசித்துவந்த ஆயிரத்து 200 சிங்களக் குடும்பங்கள் இடம்பெயர்ந்து தெற்கில் வாழ்கின்றன. அந்தக் குடும்பங்களையும் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அந்த அமைப்புக் கேட்டுள்ளது. (ஐ-3)

## இந்து விவகார அமைச்சு அலுவலகம் இன்று திறப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.15

இந்து கலாசார அமைச்சின் உப அலுவலகம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.செயலகத்தில் திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் அலுவலகத்தை திறந்து வைப்பார்.

விசேட சமயக் கிரியைகளுடன் இடம்பெறும் இந்த விழாவில் மதகுருமார்கள், இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் ஆகியோர் பங்குபற்றுவர். (ஐ-3-10)

### வவுனியா 'பாஸ்' நடைமுறை நீக்கம்:

## சட்டமா அதிபரின் விளக்கத்தை உயர் நீதிமன்றம் கோருகிறது

கொழும்பு,பெப்.15

வவுனியா 'பாஸ்' நடைமுறையைத் தளர்த்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அரசின் நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும்என்று உயர் நீதிமன்றம் நேற்று சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது.

வவுனியா 'பாஸ்' நடைமுறையை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மனித உரிமை மீறல் மனுமீதான விசாரணை நேற்று நடைபெற்றது. அதனை ஆராய்ந்த உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, டி.பி.எஸ். குணசேகர, அமீர் இஸ்மாயில் ஆகியோர் மேற்படி உத்தரவை பிறப்பித்தனர்.

வவுனியா சிதம்பரபுரம் அகதி முகாமைச் சேர்ந்த ஆறுமுகம் வடிவேல் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த

(10ஆம் பக்கம் பார்க்க)



லண்டன் சிவயோகம் அறக்கட்டளை நிறுவன உதவியுடன் கந்தரோடையில் அமைக்கப்பட்ட அன்னையருக்கான இல்லங்களைத் திறந்து வைத்து உரியவருக்கு கையளிக்கும் வைபவம் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது.

புதிதாக நிறுவப்பட்ட இல்லங்களில் ஒன்றை கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்து வைப்பதை முதல் படத்தில் காணலாம். அருகில் ஆசிரியர் ஆறு.திருமுருகனும் காணப்படுகிறார்.

திறந்து வைக்கப்பட்ட இல்லத்தை பொதுமக்கள் பார்வையிடுவதை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

## மனவளர்ச்சி குன்றிய பெண்ணை ஏமாற்றி நகைகள் அபகரிப்பு!

### யாழ். மருத்துவமனையில்

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகத் தாயாருடன் வந்திருந்த மனவளர்ச்சி குன்றிய பெண் ஒருவரை ஏமாற்றிக் கூட்டிச் சென்ற ஒருவன் அப்பெண் அணிந்திருந்த தங்க நகைகளை அபகரித்துக்கொண்டு தலைமறைவானான்.

அந்தப் பெண்ணை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து வந்த தாயார் அவரை ஓரிடத்தில் நிறுத்தி விட்டு மருந்து வாங்குவதற்காகச் சென்றதாகவும் -

இதனை அவதானித்த எத்தன் ஒருவன் அந்தப் பெண்ணை ஏமாற்றி வெளியே அழைத்துச் சென்று அவர் அணிந்திருந்த சங்கிலி, காப்புகள் ஆகிய 4 பவுண் நகைகளை அபகரித்துக்கொண்டு அந்தப் பெண்ணை நடுவீதியில் விட்டு தலைமறைவானதாகவும் -

கூறப்பட்டது.

தனது மகளைக் காணாது அழுது தவித்த தாயிடம் பின்னர் அவர் சேர்ப்பிக்கப்பட்டார்.

மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக வருபவர்களை ஏமாற்றி நகை, பணத்தை அபகரிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருவதால் மருத்துவமனைகளுக்கு வரும் பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்குமாறு மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ஒ-15)

### நாரந்தனை தாக்குதல் வழக்கு

# சம்பவம் இடம்பெற்ற சமயத்தில் கடற்படையினரும் அங்கு நின்றனர்

## யாழ். நீதிமன்றில் சாட்சியம்

யாழ்ப்பாணம்,பெப்.15

நாம் தாக்குதலுக்கு உள்ளாகிய சமயத்தில் அப்பகுதியில் கடற்படையினர் நின்றுகொண்டிருந்தனர்.

நாரந்தனைத் தாக்குதல் சம்பவம் குறித்த வழக்கு விசாரணை நேற்று யாழ்.நீதிமன்றில் இடம்பெற்ற போது சாட்சிகளில் ஒருவரான பொன்னையா கணேஸ் (வயது 58) சாட்சியமளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

லொறி போன்ற பெரிய வாகனம் ஒன்றில் வந்த 30 அல்லது 40 பேர் கம்பிகளாலும் தடிகளாலும் எம்மைத தாக்கினார்கள். அப்பொழுது கடற்படையினரும் அங்கு நின்றனர். 3 ஆவது சந்தேக நபரான ஜீவன் எனது முதுகில் நான்கைந்து தரம் அடித்தார்.

எனது வேட்டியையும் உள்ளாடையையும் களைந்து நிர்வாணமாக்கினர். அடையாள அட்டை மற்றும் பணத்தையும் பறித்தெடுத்தனர். சம்பவ இடத்தில் நின்ற எல்லோரையும் எனக்குத் தெரியும். ஆனால் அவர்களது பெயர்கள் தெரியாது. என்னால் அவர்களை அடையாளம் காட்ட முடியும் என்று அவர் தெரிவித்தார்.

23 ஆவது சாட்சியான றெலோ உறுப்பினர் கஸ்தூரி பத்மஸ்ரீதர் (வயது 25) தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:-

எமது ஆதரவாளரான கமல்ஸ்ரோனை 3 ஆவது சந்தேகநபரான ஜீவன்தான் வெட்டினார். அவரை ஜீவன் வெட்டும்போது நான் பார்த்தேன். நான் ஆட்டோவில் சென்றேன். அதற்கு முன்பு சென்ற வாகனத்தில்தான் கமல்ஸ்ரோன் இருந்தார். எமது வாகனங்கள் வழி மறிக்கப்பட்டதும், தான் இருந்த வாகனத்தில் இருந்து கமல்ஸ்ரோன் இறங்கிய போது வெட்டு வீழ்ந்தது. பேரம்பலத்தை வெட்டியவரையும் கண்டேன் அவரைக் கண்டால் அடையாளம் காட்டுவேன்.

சம்பவ இடத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களில் நெப்போலியனும் ஒருவர். அவர் அங்கு இருந்தார். வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை உறுப்பினராக அவர் இருக்கும் போது எனக்கு அவரைத் தெரியும்.

பொலீஸார் அங்கு வந்தபோது மதனராஜனும் சம்பவ இடத்துக்கு வந்தார். ஏன் தீவுப்பகுதிக்கு வந்தீர்கள்? என்று எம்மை அவர் ஏசினார். சேதமடைந்த வாகனங்களுக்கு நஷ்டஈடு தருவதாகவும் சொன்னார் என்று அவர் சாட்சியமளித்தார்.

வழக்கு விசாரணை இன்று வெள்ளிக்கிழமையும் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (ஒ-10)

## ரத்வத்தையின் மனைவிக்கு நீதிவான் உத்தரவு

கொழும்பு,பெப்.15

லொகான் ரத்வத்தையை அடுத்த மாதம் 4 ஆம் திகதி கண்டி நீதிமன்றத்தில் முன்நிறுத்துமாறு அவரது தாயாரான காமன் ரத்வத்தைக்கு நீதிவான் சி.வி.ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

லொகான் ரத்வத்தை உட்பட 8 பேருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து லொகான் தலைமறைவாகியிருந்தார்.

பின்னர் நீதிவான் முன்னிலையில் சரணடைந்த லொகான் அவரது தாயார் பிணைநின்றதால் லொகான் சரீர பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். (ஒ-8)

### உள்ளூராட்சிமன்ற ஏற்பாட்டில்

## சனசமூக நிலைய நிர்வாகிகளுக்கான செயற்பாடு குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் சனசமூக நிலையங்களின் கட்டமைப்பு, செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்கள் இம்மாதம் நான்கு உள்ளூராட்சி மன்றங்களில் நடைபெறவுள்ளன.

யாழ்.மாநகராட்சி மன்றத்தின் கீழ் இயங்கும் சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வல்வெட்டித்துறை நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதேநாளில் கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் பி.பகல் 2 மணிக்கு கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறும். ஊர்காவற்றுறை பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச சபை மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல்களில் சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.கிருஷ்ணசாமி கேட்டுள்ளார். (ஒ-180)

## தேவாலய திருவிழா

யாழ்ப்பாணம்,பெப்.15

மாதகல் புனித லூர்த்துமாதா ஆலய வருடாந்தத் திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனை இடம்பெறும்.

நாளை மறுதினம் ஞாயிறு காலை திருநாள் திருப்பலி, திருச்சொரூப பவனி, சொரூப ஆசீ என்பவற்றுடன விழா முடிவடையும். (க)

# தன்னிகரில்லாத் தன்மை கொண்டிலங்கிடும் அன்னையின் அன்புக்கு அகிலத்தில் நிகரில்லை

"ஈன்றாளின் எய்ந்த கடவுளும் இல்லை" என்பது நான்மணிக்கடிகை. இத்தகைய தாயன்பை அடியிற் கண்ட வரலாறு இனிது விளங்குகின்றது.

வடநாட்டிலே ஓர் அரசனிடம் சமஸ்தான வித்வானாக "ஸ்ரீ ஹீரன்" என்பவர் இருந்தார். இவர் வடமொழியில் வல்லவர்.

ஒருநாள் அயல்நாட்டிலிருந்து ஒரு புலவன் வந்தான். அப்புலவனுக்கும் ஆஸ்தான வித்வானாகிய ஸ்ரீ ஹீரனுக்கும் கல்விப்போர் நிகழ்ந்தது. ஸ்ரீ ஹீரன் தோல்வியடைந்தார். அந்த அவமானத்தை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவருக்கு சிந்தாமணி என்ற மகாமந்திரம் தெரியும். அம்மந்திரம் சரஸ்வதிக்குரியது. அதனைப் பன்னிரு ஆண்டுகள் ஜெபித்தால் கலைமகள் தோன்றிக் காட்சி தருவாள். இல்லையேல் நடுஇரவில் பிணத்தின்மீது அமர்ந்து அச்சம் இன்றிப் பன்னிரண்டு நிமிடம் ஜெபித்தால் கலைமகள் காட்சிதருவாள். அவருக்கு ஸ்ரீ ஹர்சன் என்ற ஒரு சிறிய குழந்தை இருந்தது.

அந்த மந்திரத்தை அந்தச் சின்னஞ்சிறு பாலகனிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று கருதினார். மந்திரத்தை உபதேசிக்கக் கூடிய வயது குழந்தைக்கு இல்லை. தன் மனைவி மாமல்லதேவிக்கு அந்த மந்திரத்தை உபதேசித்தார்.

"பெண்ணே! சிந்தாமணி என்ற இந்த மந்திரம் மிகச் சிறந்த அருமையும் பெருமையும் உடையது. இதனை நமது மகன் ஸ்ரீ ஹர்சனுக்கு உரிய காலத்தில் நீ உபதேசம் செய். இம்மந்திரத்தைப் பயபக்தியுடன் பன்னிரண்டு ஆண்டு ஜெபித்தால் கலைவாணி காட்சிதருவாள். இல்லையேல் நள்ளிரவில் பிணத்தின்மீது அமர்ந்து சிறிதும் அச்சமும் அருவருப்பும் இன்றி பன்னிரண்டு நிமிடங்கள் ஜெபித்தால் கலைவாணி காட்சி தருவாள். இது கிடைத்தற்கரிய அரிய பொக்கிஷம். இதனை மகனிடம் ஒப்புவிக்க வேண்டும்" என்று கூறினார். பின்னர் அவர் உயிர்துறந்தார்.

மனைவி மாமல்லதேவி கணவருடைய பிரிவைக் குறித்துப் பெரிதும் வருந்தினாள். மந்திரத்தை மகனிடம் ஒப்புவிக்கும் பொருட்டு உயிர்தாங்கிக்கொண்டிருந்தாள்.

ஞானக்கதிர்

குழந்தைக்கு வயது வந்தபின் அம்மந்திரத்தை அக்குழந்தைக்கு உபதேசித்தாள். தன்மகன் பன்னிரண்டு ஆண்டுகள் ஜெபித்தால்தானே வாணிதேவியின் தரிசனம் கிடைக்கும்? அத்தனை நாள் தாமதிக்காமல் அதிவிரைவில் அன்னை கலைமகளின் அருளைத் தன்னருமை மகன் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

ஒருநாள் நள்ளிரவு, தன் வீட்டுக் கூடத்தில் அவள் மல்லாந்து படுத்துக் கொண்டாள். மகனை மார்புமீது வைத்துக்கொண்டாள். "கண்ணா, உனக்குச் சொன்ன மந்திரத்தை நீ சொல்லிக்கொண்டே இரு. அப்படிச் சொல்லிக்கொண்டே இருந்தால் உனக்கு நிரம்பப் பட்சணம், விளையாட்டுச் சாமான்கள் வாங்கித்தருவேன்" என்றாள். அவள் இட்ட திட்டத்தை குழந்தை அறியாதுதானே! தாயின் மார்பில் அமர்ந்திருந்த ஸ்ரீ ஹர்சன் மந்திரத்தை இடையறாது ஜெபித்துக்கொண்டிருந்தான்.

தாய் விளக்கை அணைத்தாள். முன்னமேயே படுக்கைக்குள் ஆயத்தமாக வைத்திருந்த வாளை எடுத்து தன் தலையைத் துண்டித்துக் கொண்டாள். குழந்தை இதை அறிந்து கொள்ளவில்லை. மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே இருந்தது. நள்ளிருளில் பிணத்தின்மீது இருந்து மந்திரத்தை ஜெபித்ததால் கலைமகள் தோன்றினாள். அந்த அருளொளியில் வாணிதேவியைக் குழந்தை தரிசித்தது. அதேநேரத்தில் தன்னைப் பெற்றெடுத்த அன்னை மாண்டிருக்கக் கண்டது. இந்தத் தாயை நோக்கி அழுவதா? அந்தத் தாயை நோக்கித் தொழுவதா? என்று எண்ணித் திகைத்தது.

கலைமகள் அக்குழந்தைக்குப் பூரணமான அருளை வழங்கிக் கலைஞானத்தைத் தந்தருளினாள். ஸ்ரீ ஹர்சன் கலைமகளை நோக்கி 'அம்மா! என் தாய் பிழைக்க அருள்செய்' என்று தொழுது அழுது வேண்டினான். வாணிதேவி அருள்புரிந்தாள். மாமல்லதேவி உயிர்பெற்றெழுந்தாள்.

ஸ்ரீ ஹர்சன் நளனுடைய சரித்திரத்தை 'நைடதம்' என்ற நூலாகப் பாடினார்.

அந்த நைடதம் நூலே மிக உயர்ந்த காவியமாக இன்றைக்கும் விளங்கிக்கொண்டிருக்கிறது. "நைடதம் புலவருக்கு ஔடதம் என்பது பழமொழி" இந்த வரலாற்றினால் தாய் அன்பு நன்கு புலனாகிறது. *

(நன்றி
வாரியாரின் அமுதமொழி)

# தகாத உறவில் ஈடுபட்டதற்காக இலங்கைப் பெண்ணுக்கு கசையடி

### ஐக்கிய அரபு இராச்சியத்தில்

அபுதாபி,பெப்.15

தகாத உறவில் ஈடுபட்ட குற்றத்திற்காக ஐக்கிய அரபு இராச்சியத்தின் இஸ்லாமிய நீதிமன்றம் ஒன்று இலங்கைப் பெண்ணுக்கு 150 கசையடிகளும், 2 மாதச் சிறைத்தண்டனையும் விதித்துள்ளது.

அவருடன் தகாத உறவு வைத்திருந்த நபருக்கு 100 கசையடிகள் தண்டனையாக வழங்கப்பட்டது.

வீடொன்றில் பணியாளராகப் பணிபுரிந்த மேற்படி பெண் தற்போது கர்ப்பிணியாக இருப்பதாகவும் -

அதனால் கசையடித் தண்டனை நிறைவேற்றுவது ஒத்திப்போடப்பட்டுள்ளதாகவும் -

தற்போது சிறையில் தண்டனையை அனுபவித்துவரும் அவர், பின்னர் நாடு கடத்தப்படக்கூடும் என்றும் -

தெரிவிக்கப்பட்டது. (ஒ-8)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.15

கொக்குவில் லயன்ஸ் கழகம், இணுவில் லயன்ஸ் கழகத்துடன் இணைந்து நடத்தும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

வலயத் தலைவர் லயன் தேவராஜா முன்னிலையில் இடம்பெறும் இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராக பிராந்தியத் தலைவர் ஆர். நடராஜா கலந்துகொள்வார். (ஒ-3)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,பெப்.15

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் - யாழ்.மாவட்ட ஆசிரியர்களிடையே நடத்தி வரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**யாழ்-இந்துக்கல்லூரி மைதானத்தில்**

- காலை 9.30 மணி - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை எதிர் கரவெட்டி கல்விக்கோட்டம்.
- பிற்பகல் 2 மணி - சங்கானை கல்விக்கோட்டம் எதிர் யாழ்ப்பாணக் கல்விக் கோட்டம்.

**யூனியன் கல்லூரியில்**

- காலை 9.30 மணி - பலாலி ஆசிரிய கலாசாலை எதிர் தெல்லிப்பழை கல்விக்கோட்டம்.
- பிற்பகல் 2 மணி - நல்லூர் கல்விக் கோட்டம் எதிர் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம். (ஒ-3)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,பெப்.15

நாவாந்துறை றோ.க.வித்தியாசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகளின் முன்னோடி நிகழ்வான மரதன் ஓட்டப் போட்டி இன்று காலை 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வை நாவாந்துறை பங்குத்தந்தை அருட்திரு பீற்றர் துரைரட்ணம் அடிகளாரும் வண நாவலர் வித்தியாலய அதிபர் ந.சிவராசாவும் ஆரம்பித்து வைப்பர். (ஒ-3)

✪ ✪ ✪

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் இளவாலை கன்னியர் மட மகா வித்தியாலயமும் இணைந்து நடத்தும் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-8)

அதிபர் சதாமை அகற்றி

# ஈராக்கில் ஆட்சி மாற்றத்தை விரைவில் ஏற்படுத்துவோம்

## கொலின் பவல் சூளுரை

வாஷிங்ரன்,பெப்.15

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனை விரைவில் ஆட்சியில் இருந்து அகற்று வோம். அதனைச் செய்வதற்கான எத்தனையோ திட்டங்கள் கைவசம் உள்ளன. அதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் அமெரிக்க வெளிவிவகாரத்துறைச் செயலர் கொலின் பவல்.

அமெரிக்க செனட்டின் பட்ஜெட் குழுக்கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

தீவிரவாதம் மற்றும் தீயசக்தி களுக்கான அடிப்படை நாடுகள் என்று



ஈரான், ஈராக், வடகொரியா ஆகிய வற்றை ஜனாதிபதி புஷ் வர்ணித் துள்ளார். இந்த மூன்று நாடுகளில் முதலில் ஈராக்கை ஒடுக்குவதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

அதிபர் சதாம் ஹுசைனை ஆட்சி யில் இருந்து விரட்டியடித்துவிட்டு புதிய ஆட்சியை அங்கு ஏற்படுத்து வதற்கு அமெரிக்கா முன்னுரிமை கொடுத்துச் செயற்பட்டுவருகின்றது.

அதேசமயம் -

ஈரான், வடகொரியா ஆகிய நாடு கள்மீது போர் தொடுக்கும் திட்டம் எதுவும் அமெரிக்காவுக்கு இல்லை. அந்த நாடுகளுடன் பேச்சு நடத்தி அதன்மூலம் உறவை மேம்படுத்திக் கொள்ளவே நாம் விரும்புகின்றோம்.

இந்த இரு நாடுகளுடன் ஒப்பிடும் போது ஈராக் நிலைமை வேறுபட்டது. அந்த நாட்டைப் பொறுத்தவரை ஈராக் கில ஆட்சிமாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் அமெரிக்கா வின் நிலைப்பாடாகும். அதுதான் அந்தப் பிராந்தியத்துக்கும் நல்லது; ஈராக் மக்களுக்கும் நல்லது. - என் றார். (ம)

# பலஸ்தீன அதிகார சபைக்கே ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டன

## ஒப்புக்கொள்கிறார் அரபாத்

ஜெருசலேம்,பெப்.15



கடந்த ஜனவரி மாதம் கருங்கடலில் வைத்து இஸ்ரேலியக் கடற்படையால் தடுத்து நிறுத்தப்பட்ட 'கரீன் - ஏ' என்ற கப்பலில் கடத்தப்பட்ட ஆயு தங்கள் பலஸ்தீன அதிகார சபைக்கே எடுத்து வரப்பட்டன என்று பலஸ்தீன தலைவர் யஸீர் அர பாத் ஏற்றுக்கொண்டுள்ளார்.

அமெரிக்க வெளிவிவகாரத் துறைச் செயலாளர் கொலின் பவலுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய கொலின் பவல் இதனைத் தெரிவித்தார்.

"மூன்று நாள்களுக்கு முன்னர் அரபாத் எனக்கு கடிதம் எழுதியி ருந்தார். அதில் 'கரீன் - ஏ' கப்பலில் ஆயுதங்கள் கடத்தப்பட்டதற்குத் தான் பொறுப்பேற்றிருந்தார். ஆனால் தனிப்பட்ட ரீதியில் அல்ல. பலஸ்தீன அதிகார சபைத் தலைவர் என்ற ரீதியிலேயே அவர் பொறுப்பேற்றுள்ளார்" என் றார் பவல்.



'கரீன் - ஏ' கப்பலில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் சிலவற்றைக் காணலாம்.

எதிர்காலத்தில் தாம் ஆயுதங்களை வாங்கப்போவ தில்லை என்று அரபாத் உறுதியளித்துள்ளதாகவும் பவல் சொன்னார்.

அரபாத்தின் விளக்கங் கள் குறித்து அமெரிக்கா திருப்தி கொண்டுள்ளது. ஆனால் அவற்றை அவர் செயல்படுத்திக் காட்டவேண்டும் என்று அமெரிக்க அரச திணைக்களம் தெரிவித்தது.

'கரீன் - ஏ' கப்பலில் பலஸ்தீனர் களுக்கே ஆயுதங்கள் கடத்தப்பட் டன என்று கடந்த பல தடைவைகள் இஸ்ரேல் குற்றம் சுமத்தி வந்த போதும் பலஸ்தீன அதிகார சபை அதனை இதுவரை மறுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கந்தகார் விமான நிலையம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்!

## இரு அமெரிக்கப் படையினர் காயம்

காபூல்,பெப்.15

ஆப்கானிஸ்தானின் தென் பகுதி யில் உள்ள முக்கிய நகரான கந்த காரின் விமான நிலையம் மீது இனந் தெரியாத சிலர் தாக்குதல் நடத்தி யுள்ளனர். இந்த விமான நிலையம் அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட் டில் உள்ளது.

தாக்குதலாளிகள் சிறிய ரகத் துப்பாக்கிகளைக் கொண்டு சுட்டனர் என்றும் மோட்டார் தாக்குதல்கள் சிலவும் இடம்பெற்றன என்றும் தெரி விக்கப்படுகின்றது. இதில் இரண்டு அமெரிக்கப் படையினர் காயமடைந் தனர்.

பதிலுக்கு அமெரிக்கப் படையின ரும் தாக்குதலை நடத்தினர்.

உடனடியாக அபாச்சி ஹெலி களில் புறப்பட்ட அமெரிக்கப் படை யினர் தீவிர தேடுதல்களை நடத் தினர் ஆனால் தாக்குதல்களை நடத்தியவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அந்தப் பகுதியில் ரோந்து நட வடிக்கையில் ஈடுபட்ட 7 ஆப்கானி யப் படையினரைக் கைது செய்து விசாரித்த அமெரிக்கப் படையினர் பின்னர் அவர்களை விடுவித்தனர்.

இவர்களே தாக்குதலை நடத்தி யிருக்கக்கூடும் என்று அமெரிக்கப் படையினர் கருதுகின்றனர்.ஆனால் அவர்கள் ஏன் அவ்வாறு நடந்து கொண்டார்கள் என்று தெரியாமல் குழம்பிப் போயுள்ளனர்.

இவர்களுடன் வந்த வேறு மூவர் வாகனம் ஒன்றில் ஏறித் தப்பிச் சென்றுவிட்டதாகக் காபூலில் அமெ ரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கந்தகார் விமான நிலையத்தில் 4 ஆயிரத்து 100 அமெரிக்கப் படை யினர் தங்கியுள்ளனர். அமெரிக்கா வால் சிறைபிடிக்கப்பட்ட பல அல் கெய்டா மற்றும் தலிபான் கைதி களும் இந்தத் தளத்திலேயே தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

எனவே இந்தத் தாக்குதல் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின் றது. கந்தகார் விமானநிலையம் அமெரிக்கப் படைகளின் கட்டுபாட்



கந்தகார் விமான நிலையத்தில் காவல் கடமையில் இருக்கும் அமெரிக்கச் சிப்பாய்.

டின் கீழ் வந்த பின்னர் அதன் மீது நடத்தப்படும் இரண்டாவது தாக்குதல் இதுவாகும் இதனால் ஆப்கானிஸ் தானில் தலிபான் மற்றும் அல்கெய்டா அமைப்பினர் தமது கெரில்லா நட வடிக்கைகளை ஆரம்பித்துள்ளனரோ என்ற அச்சத்தையும் ஏற்படுத்தியுள் ளது. (ம)

## கம்போடியாவில் மாணவன் கொல்லப்பட்டான்

நொம்பென்,பெப்.15

கம்போடியாவில் இரு மாணவர் களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு உயிர்ப்பலியில் முடிந்துள்ளது.

தலைநகர் நொம்பெனில் உள்ள பாடசாலையில் கற்கும் சீன் சாரெத் (வயது17) என்ற மாணவன் சக மாண வன் ஒருவனால் அடித்துக் கொல்லப் பட்டான்.

சீன் சாரெத் வகுப்புகளுக்கு ஒழுங் காகச் செல்வதில்லை. அத்தோடு ஏனைய மாணவர்களுடனும் அவன் தகராறு செய்து வந்தான் என்று அவனது பாடசாலை ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

குறிப்பிட்ட நாளன்று சீன் சாரெத் வகுப்புக்கு வரவில்லை எனவே வகுப்புக்கு வராதவர்கள் பட்டியலில் அவனது பெயர் இருந்தது.

ஆனால் திடீரெனப் பாடசாலைக்கு வந்த சாரெத் தனது பெயரை அந் தப் பட்டியலில் இருந்து நீக்க முயன்றுள்ளான். அதனைத் தடுக்க முயன்ற வகுப்பு முதல்வன் சே செடாவுக்கும் சாரெத்துக்குக்கும் இடையில் தகராறு இடம்பெற்றுள் ளது.

சுமார் 2 மணி நேரம் இந்தச் சண்டை இடம்பெற்றது. ஆத்திரத் தில் சாரெத்தின் பின்தலையில் செடா ஓங்கித் தாக்கினான். இத னால அந்த இடத்திலேயே மயங்கி விழுந்தான் சாரெத் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அவன் சிகிச்சை பல னளிக்காமல் அங்கு உயிரிழந்தான்(ம)

## மக்காவில் 40 பேர் பலி!

புனித ஹஜ் கடமைகளுக்காக மக்காவுக்குச் சென்ற முஸ்லிம் யாத் திரிகர்கள் 40 பேர் தெற்கு சவூதி யில் இடம்பெற்ற வீதி விபத்து ஒன் றில் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் 37 பேர் பாகிஸ்தானியர்கள், ஒருவர் சவூதி அரே பியாவைச் சேர்ந்தவர், ஒருவர் எகிப் தைச் சேர்ந்தவர் மற்றையவர் சிரியா வைச் சேர்ந்தவர் என்று தெரிவிக் கப்பட்டது. இவர்கள் பயணம் செய்த பஸ் சவூதி - எமிரேட்ஸ் எல்லையில் சென்றுகொண்டிருந்தபோது ட்ரக் ஒன்றுடன் மோதியதில் தீப்பிடித்து எரிந்தது என்று பொலீஸார் தெரிவித் தனர். (ம)

# அல்கெய்டா சந்தேக நபர் யேமன் குண்டுவெடிப்பில் பலி!

சனானா.பெப்.15

அல்கெய்டா அமைப்பின் சந்தேக நபர் ஒருவர் யேமன் தலைநகர் சனா னாவில் குண்டுவெடிப்பு ஒன்றில் கொல்லப்பட்டார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

சமீர் அஹமட் மொஹமட் அல் ஹடா (வயது 25) என்ற நபரே பலி யானவராவார்.

பொலீஸாரை நோக்கி கிரனேட்டை எறியமுற்பட்டவேளையில் அது வெடித்து அவர் உயிரிழந்ததாகப் பொலீஸார் கூறுகின்றனர். இந்தச் சம்பவத்தில் வேறு எவரும் கொல்லப் படவோ காயமடையவோ இல்லை.

யேமன் துறைமுகத்தில் தரித்து நின்ற அமெரிக்கப் போர்க் கப்பலான யு.எஸ்.எஸ்.கோல் மீது 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக அமெரிக்கா தேடிவரும்வரும் நபர்களில் அல் ஹடாவும் ஒருவர் என்கின்றனர் யேமன் பொலீஸார்.

ஹடா வெளிநாடுகளில் தீவிர வாத நடவடிக்கைளில் ஈடுபடுவதற் காக ஆப்கானிஸ்தானில் பயிற்றப்பட் டவர் என்று அமெரிக்கா தெரிவித் துள்ளது. ஆனால் ஹடா யேமனில் அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கைக ளில் ஈடுபட்டதற்கான தகுந்த ஆதா ரங்கள் எதுவும் இதுவரை வெளியி டப்படவில்லை. (ம)

# இந்தியத் திரைப்படம் ஒன்று ஒஸ்கார் விருதுக்கு சிபாரிசு!

வாஷிங்ரன்,பெப்.15


இந்திய திரைப்படமான லகான் (Lagaan) ஒஸ்கார் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சிறந்த வெளிநாட்டுப் படத்துக் கான ஒஸ்கார் விருதுப் பிரிவுக்கு இந்தத் திரைப்படம் சிபாரிசு செய்யப் பட்டுள்ளது.

இந்தத் திரைப்படம் அமெரிக்கா வில் தற்போது மிகப்பிரபலம் பெற்று வருகின்றது.

அமெரிக்கர் அல்லாதவர்களால் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டுப் படங் களுக்கான விருதுக்கு இந்தியப் படம் ஒன்று சிபாரிசு செய்யப்படுவது கடந்த 40 வருடங்களில் இது இரண்டாவது தடவையாகும்.

லகான் திரைப்படத்தின் கதை இந்தியா பிரிட்டிஷாரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தபோது நடக்கின்றது. பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர் களினால் விதிக்கப்பட்டிருந்த நில வரியை நீக்குவதற்காக கிரிக்கெட்




லகான் பட விளம்பரத்தைப் பார்வையிடும் இளைஞன்.

ஆட்டத்தைச் சவாலாகப் பயன்படுத் திய ஏழை விவசாயிகளின் கதை தத்ரூபமாகப் படமாக்கப்பட்டிருகின் றது.

ஆஷ்தோஸ் கௌரிகர் இயக்கிய இந்தப் படம் ஒருவேளை ஒஸ்கார் விருதை வெல்லாமல் போகலாம். ஆனால் நாம் சரியான தடத்தில் பயணம் செய்ய ஆரம்பித்திருக்கி றோம் என்பதை ஒஸ்கார் விருதுக் கான இந்த சிபாரிசு உணர்த்துகின் றது என்றார் இந்தியாவின் சினிமா வாரஇதழ் ஒன்றின் ஆசிரியர்.

சர்வதேச பார்வையாளர்களை நோக்கி இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் திரும்பும் ஒரு நிகழ்வாக இது இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

பலுங் கொங் அமைப்புக்கு ஆதரவு தெரிவித்த

# 20 வெளிநாட்டுப் பிரஜைகள் சீனப் பொலீஸாரால் கைது!

பெய்ஜிங்,பெப்.15

சீனாவில் தடைசெய்யப்பட்ட பலுங் கொங் மத அமைப்புக்கு ஆத ரவாகச் செயற்பட்டதாகத் தெரி வித்து 4 பிரிட்டிஷ் பிரஜைகள் உட் பட 20 மேற்கு நாட்டவர்களை சீனப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பலுங் கொங் உறுப்பினர்கள்

தனது பிரஜைகள் கைது செய் யப்பட்டது தொடர்பான விபரங்க ளைப் பெறுவதற்காகச் சீன அரசுடன தொடர்பு கொண்டுள்ளதாக பிரிட்டிஷ் வெளிவிவகார அலுவலகம் தெரி வித்துள்ளது.

பலுங் கொங் அமைப்புக்கு ஆத ரவு தெரிவித்து தியனன்மென் சதுக் கத்தில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட் டம் இடம்பெற்றது. இந்த வாரத்தில் நடக்கும் இத்தகைய இரண்டாவது ஆர்ப்பாட்டம் இதுவாகும். கடந்த திங்களன்றும் இத்த கைய ஓர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதற்காகவே 20 வெளிநாட்டவரும் கைது செய்யப்பட்டனர்.

பொலீஸார் தடியடி, கண்ணீர்ப் புகைக்குண் டுப் பிரயோகங்களை மேற்கொண்டு ஆர்ப்பாட் டக்காரர்களைக் கலைத்த துடன் பலரைக் கைது செய்துள்ளனர்.

"நூற்றுக்கணக்கான பொலீஸார் தியனன்மென் சதுக்கத்தைச் சுற்றி வளைத்து ஆர்ப்பாட்டக்காரர்களை உடனடியாகக் கைது செய்து தயா ராக நின்ற வான்களில் ஏற்றிச் சென் றனர்" - என்று தெரிவித்தார் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான அட்ம் புருக்ஸ். (ம)



பிரேஸிலின் புகழ்பெற்ற வருடாந்த 'ரீயோ காணிவெல்' கொண்டாட்டத்தை யொட்டி இடம்பெற்ற கேளிக்கை அணிவகுப்பில் பிரபல 'மொடல்' அழகி வீவ்பனே அரோஜோ பாரம்பரிய 'சம்பா' நடனம் ஆடியபோது எடுக்கப்பட்ட படம். 'ரீயோ காணிவெல்' கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதற்காக வருடந் தோறும் ஆயிரக்கணக்கான உல்லாசப் பயணிகள் பிரேஸில் வருவது வழக்கம்.

# அநீதியை விட்டு நேரிய வழியில் செல்வோம்

## தவக்காலச்சிந்தனை

### மூன்றாம் நாள்

'பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்' என்பார்கள். பதவி வந்தால் பாவபுண்ணியம், பரிவு, பண்பு பார்ப்பதில்லை பாரான்வோர்." இது இன்று நேற்றல்ல இயேசுவின் காலத்திலும் நிகழ்ந்த வரலாற்று உண்மை. இயேசுவோடு மூன்று வருடகாலம் வாழ்ந்து அவராலே உருவாக்கப்பட்ட சீடரான யூதாஸ் முப்பது வெள்ளிக் காசுக்காக மாசற்ற இரத்தத்தைக் காட்டிக்கொடுத்து வரலாற்றில் இடம்பிடித்துக்கொண்டான்.

பணத்தை எமது பெட்டகத்தில் குவிக்க வேண்டும். செல்வச் செழிப்போடு வாழவேண்டும் என்ற நோக்கில் தவறான, குறுக்கு வழிகளில் நாம் ஈடுபடவில்லையா? பணத்திற்காகக் காட்டிக்கொடுப்புக்களும், கழுத்தறுப்புகளும், கடத்தல்களும், மிரட்டல்களும், கொலைகளும் இன்று சர்வசாதாரணமாக நடைபெறுகின்றன.

எமது சுயலாபத்திற்காக நிரபராதிகளை மாட்டிவிடும்போது சமூகத்தில், குடும்பத்தில் அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைச் சிந்திக்கின்றோமா? குற்றத்திற்கு உடந்தையாக இருந்துவிட்டு ஊருக்கு அம்பலமானதும் கைகழுவி நழுவும்போது பிலாத்துவாக நாம் மாறவில்லையா? ஏழைகள் வாழ்க்கைச் சுமையால் வருந்தும்போது அதிக விலையில் பொருள்களை விற்று அதிலே நாம் குளிர்காயவில்லையா? கறுப்புப் பணங்களை முடக்கிவைத்து வாழ்வின் இருப்புக்காக ஏங்கும் ஏழைகளுக்கு அநீதி இழைக்கவில்லையா? சிந்தித்துப்பார்.

பணத்திற்காகக் குணத்தை இழக்காது - பதவிக்காக நீதி நேர்மையைப் புதைக்காது - நேரிய வழியில் உழைப்போம். அந்த உழைப்பின் பயனைப் பிறருடன் பகிர்ந்து உண்போம். நெருங்கி உறவாடுவோம். அழிவுறும் மண்ணக செல்வத்தை வெறுத்து முடிவில்லா வாழ்வுதரும் விண்ணகச் செல்வத்தின் வழிகளை நாடுவோம்.

**எஸ்.யேசுதாஸ்**
*கொழும்புத்துறை.*

## பிரிட்டிஷ் வைத்திய நிபுணர்களால்

# இரு தினங்களில் 16 பேருக்கு 'பிளாஸ்ரிக்' சத்திர சிகிச்சை

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினமும், நேற்றும் 16 பேருக்கு 'பிளாஸ்ரிக்' சத்திர சிகிச்சைகளை பிரிட்டிஷ் வைத்திய நிபுணர்கள் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் வந்துள்ள பிரிட்டிஷ் வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழுவினர் தமது சேவையை வெகு ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் செய்துவருகின்றார்கள் என்று யாழ்.ஆஸ்பத்திரி டாக்டர்கள் தெரிவிக்கின்றனர்.

பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைக்காக இதுவரை 260 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், இந்தச் சிகிச்சைக்காகத் தற்போதும் பதிவுகள் நடைபெற்று வருகின்றன என்றும் வைத்தியசாலை அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுமார் இருவாரகாலம் இங்கு தங்கியிருக்கும் பிரிட்டிஷ் வைத்தியர்கள் தெரிவுசெய்யப்பட்ட அனைவருக்கும் தமது சேவையை வழங்குவர் என்றும் அவர் கூறினார்.

(க-180)

We Serve

## உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும்

## இலவச மருத்துவ முகாம்

*இடம்:* சந்திரோதய வித்தியாலயம், உரும்பிராய்.
*காலம்:* **17.02.2002 ஞாயிற்றுக்கிழமை**
**காலை 9 மணிமுதல் 12 மணிவரை.**

மேற்படி முகாமில்

பற்பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, பொது மருத்துவப் பரிசோதனை என்பன இலவசமாக மேற்கொள்ளப்படும்.

*அனைவரும் வருக பயன்பெறுக.*

லயன் த.திருநாவுக்கரசு, செயலாளர்.
(C/20740)
லயன் V.சின்னத்துரை J.P., தலைவர்.

## கண்ணீர் அஞ்சலி

ஸ்ரீ முருகன் நகைப்பூங்கா உரிமையாளரான

**த. மணிவண்ணன்**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தம்பிப்பிள்ளை கனகம்மா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

S.புவிச்சந்திரன்,
வினோ நகைப்பூங்கா,
யாழ்ப்பாணம்

(C/20744)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய பரிபாலனசபை உறுப்பினர்

**திரு.வீ.கணேசலிங்கம்** அவர்களின் தாயார்

**திருமதி வீரசிங்கம் அன்னம்மா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அமரரின் ஆத்மா சாந்தி அடைவதாக!*

பரிபாலன சபையினர்,
பர்வதவர்த்தினி அம்பாள் ஆலயம், ஊரெழு. (718)

# மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.15

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ச.இராமலிங்கம் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டி நிகழ்வுகளில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பிரதிக் கல்விப்பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.செல்லையா, வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும், ஆஸ்திரேலியாவில் வரி விதிப்பு அதிகாரியாகக் கடமையாற்றி வருபவருமான சி.குமரகுரு கௌரவவிருந்தினராகவும் கலந்துகொள்வர். (க-7)

★ ★ ★

பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் வே.சிவசுந்தரம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ரவிராஜ் பிரதமவிருந்தினராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (க-7)

★ ★ ★

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று அதிபர் அருட்சகோதரி மரிய றோசாறியோ தலைமையில் நடைபெறும்.

யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் த.அருணகிரிராசா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்கின்றார். (க-11)

★ ★ ★

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதமவிருந்தினராக நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் அதிபர் சோ.விஸ்வலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், கோப்பாய் பிரதேச செயலக வேலைகள் பரிசோதகர் சி.தங்கராஜா ஆகியோரும் கலந்துகொள்வர். (க-10)

★ ★ ★

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் கு.சிவானந்தம் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராகத் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.கணேசனும், சிறப்புவிருந்தினராகக் கரவெட்டியார்க்கரு விநாயகர் வித்தியாலய அதிபர் க.கணபதிப்பிள்ளையும் கலந்துகொள்வர். (க-177)

# முன்பள்ளி ஆசிரியர் கூட்டம்

வலி.கிழக்கு,பெப்.15

வலிகாமம் கிழக்கு பிரதேசசபைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முக்கிய கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு நீர்வேலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வலி.கிழக்கு பகுதி சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் அறிவித்திருக்கிறார். (க-180)

# மைதானத்துக்கு 8 பரப்புக் காணி

அச்சுவேலி,பெப்.15

அச்சுவேலி மத்திய கல்லூரியின் பயன்பாட்டிற்கு 8 பரப்புக்காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலையுடன் இணைந்த நிலையில் மாணவர்களுக்கான விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கு கல்லூரிக்கு அருகில் உள்ள 8 பரப்புக் காணியே இரண்டரை லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் வசிக்கும் பழைய மாணவர்களின் நிதி உதவியுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இந்தக் காணியை கொள்வனவு செய்துள்ளது. (க-11)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி

**தங்கமுத்து இரத்தினசபாபதி** (பேபிஅக்கா)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட எமது அன்புத் தாயார் திருமதி தங்கமுத்து இரத்தினசபாபதி அவர்களின் நினைவாக இன்று (15.02.2002) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் பங்குபற்றி சகலவிதத்திலும் உதவியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி, மலர் வளையங்கள், மாலைகள் வைத்து அஞ்சலி செய்த உடுவில் மான்ஸ் த.க. பாடசாலையைச் சார்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோருக்கும் எம் உளம் நெகிழ்ந்த நன்றிகள்!

*"துரைவில்லா",*
*உடுவில்.* (674) - பிள்ளைகள்.

## CEYLON ELECTRICITY BOARD

## CALLING QUOTATIONS FOR THE SUPPLY OF FUEL INJECTOR NOZZLES

Quotations are invited for the supply, preferably at Jaffna, of 16 Nos Fuel Injector Nozzles for the Mirrlees engine of the generator sets at Central Power Station, Chunnakam.

Sealed quotations shalle be forwarded on the quotation form avilable at my Office on payment of a non-refundable fee of Rs. 50/-. This payment shall be payable by a Bank draft/Money order drawn in favour of the General Manager, Ceylon Electricity Board, Colombo.

The quotations shall be posted or deposited in the tender box at my Office on or before10.00 hours. on 28th February 2002. The words "Quotations for the supply of fuel Injector Nozzles" shall be marked on the top left hand corner of the envelope.

**Deputy General Manager (North)**

*Office of the D.G.M. (North),*
*Ceylon Electricity Board,*
*536/1, K.K.S. Road, Jaffna.* (C/20745)

# மரண அறிவித்தல்

## திருமதி வீரசிங்கம் அன்னம்மா

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும்; ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் அன்னம்மா நேற்று (14.02.2002) வியாழக்கிழமை காலமானார்.

இவர் அமரர் வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் ஜெகநாதலிங்கம் (கொழும்பு), கணேசலிங்கம், சுந்தரலிங்கம், நாகேஸ்வரி, புவனேஸ்வரி (கனடா), சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மாதேவி, பரமேஸ்வரி, சந்திராதேவி, தர்மலிங்கம், சிறீரஞ்சன் (கனடா), பவானி ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்தூரன், குருபரன், கஜன், தர்சினி, நளாயினி, பிரசன்னா, திருமாறன், விமல், வித்தியா, பகீதா, நிதர்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2002) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரெழு பொக்கனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஊரெழு கிழக்கு,*
*சுன்னாகம்.* (717)

*தகவல்:*
வீ.சிவகுமார்
*(மகன்)*

# உதயன்

## சமாதானத்தை நோக்கிய பாதைகள் திறக்கட்டும்

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்கும், புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள பெருநிலப் பரப்புக்கும் இடையே பொதுமக்கள் போக்குவரத்துச் செய்ய வசதியாக இரண்டு பாதைகள் இன்று திறக்கப்படுகின்றன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசு - புலிகளிடையே நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சியாக நல்லெண்ணப் புறச்சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் நடவடிக்கைகளில் இன்று இடம் பெறும் பாதைத்திறப்பு மிக முக்கியமான ஒரு நிகழ்வாக அமைகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் தொடர்பு துண்டிக்கப்பட்டவர்களாக இருந்துவந்த வன்னிப் பிரதேச மக்களின் நீண்டகால மனிதாபிமானப் பிரச்சினைகளில் ஒன்று வெளியிடங்களுக்கான அவர்களது போக்குவரத்தும் அதற்கான பாதுகாப்பான பாதை வசதி இல்லாமையும்தான்.

புதிய அரசு ஆட்சிக்கு வந்ததும் சமாதான முயற்சிகள் வேகம்பெற்று, சீரான தடத்தில் நகரத்தொடங்கிய பின்னர், வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசம்மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரக் கட்டுப்பாடுகளை அரசு தளர்த்தியது. அதனை அடுத்து அத்தியாவசியப் பொருள்கள் உட்படக் கடந்த காலத்தில் அந்த மக்களுக்குக் கிடைத்திராத பல பொருள்களும் அங்கு எடுத்துச் செல்லப்பட்டுவருகின்றன. எனினும் சீரான போக்குவரத்துப் பாதை இல்லாதிருந்ததால் பொருள்களை அனுப்பும் பணிகள் முழுமையடையவில்லை. இன்று திறக்கப்படும் இரண்டு பாதைகளும் மக்களின் போக்குரவத்துச் சிரமங்களையும், பொருள்களை எடுத்துச் செல்வதிலுள்ள தடை, தாமதங்களையும நீக்கிவிடும் என்பது வன்னிப் பிரதேச மக்களின் நம்பிக்கை.

இன்று திறக்கப்படும் பாதைகள் தொடர்ந்து வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான நட்புறவுப் பாலமாக - நல்லெண்ணப் புரிந்துணர்வின் அடையாளமாக - நின்று நிலைக்க வேண்டும்.

வடக்கில் குடாநாட்டுக்கும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் நாட்டு மக்கள் பயணம் செய்வதற்குப் பாதுகாப்பு அனுமதிபெறும் நடைமுறையை அரசு நீக்கியிருக்கிறது. குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் மக்கள் பயண அனுமதிபெறுவதிலுள்ள கட்டுப்பாடுகளும் விரைவிலேயே நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வடபகுதிக்கு மருந்துப் பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை எடுத்துவர இதுவரைகாலமும் இருந்து வந்த கெடுபிடிகளும், தடைகளும்கூட நீக்கப்பட்டிருக்கின்றன.

இவைபோன்ற பல நல்லெண்ண நடவடிக்கைகளை அரசுத்தரப்பு எடுத்திருக்கிறது. சமாதானத்தை அவாவி நிற்கும் நாட்டுமக்களின் மனங்களில் இந்த நிகழ்வுகள் உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

ஆண்டாண்டு காலமாகத் தமிழ் மக்கள் அனுபவித்துவந்த அன்றாடப் பிரச்சினைகளில் இன்னும் ஏராளமானவற்றுக்கு அரசு தீர்வுகண்டாக வேண்டியிருக்கிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு அவற்றுக்கும் தீர்வுகண்டு, விடுதலைப் புலிகளின் சமாதானக் கரங்களை இறுகப் பற்றிக்கொண்டு, நாட்டையும் மக்களையும் ஒளிமயமான எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்லும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது எனினும் மக்களுக்கும் பொருளாதாரத்துக்கும் மொத்தத்தில் முழுநாட்டுக்குமே பேரழிவுகளை ஏற்படுத்திய யுத்தத்திற்கு மூலகாரணமாக விளங்கும் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதிலேயே இறுதி வெற்றி தங்கியுள்ளது.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு எல்லாம் அடுக்கடுக்காகத் தீர்வுகளைக் காணமுயலும் அரசு, தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வைத் தரப்போகின்றது?

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவுசெய்யத்தக்க தீர்வு ஒன்றை இதயசுத்தியோடு அரசு முன்வைக்குமா?

பொறுத்திருந்து பார்ப்போம்.

புண்ணியநாச்சியம்மை குருபூசைத் தினத்தையொட்டி

# சைவ பரிபாலன சபை நடத்திய பண்ணிசைப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,பெப்.15

புண்ணியநாச்சியம்மையாரின் குருபூசைத் தினத்தை முன்னிட்டு யாழ். சைவபரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும்பெற்ற மாணவர்களின் பெயர் விவரம் முறையே வருமாறு:-

### *கீழ்ப் பிரிவு*

மயூரதி குகனேஸ்வரன் (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), சே.கோபிகா (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), ரேணுகா சற்குணபாலன் (யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம்).

### *மத்திய பிரிவு*

பிரகஸ்வினி ரஞ்சன் (வேம்படி மகளிர் கல்லூரி), சர்மிளா சிவபாதம் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), விஜயருக்ஷாயினி சந்திரசேகரம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

### மேற் பிரிவு

வாசுகி கிருஷ்ணன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), சுந்தரமூர்த்தி கபிலன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), சத்தியமூர்த்தி லக்மன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), அழகேசன் அமிர்தலோஜனன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) - மூன்றாம் இடத்தை இருவர் பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கு முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப்பதக்கம் என்பன வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் புண்ணியநாச்சியம்மையாரின் குருபூசைத் தின விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கான பதக்கங்கள் சான்றிதழ்கள் வழங்கப்படும் என சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (க-7)

சுகாதாரக் குறைபாடுகளுடன் காணப்பட்ட

# இரு உணவக உரிமையாளர்களிடம் 8 ஆயிரம் ரூபா தண்டம் அறவீடு

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்ப்பாணம் அரசடி வீதி மற்றும் கே.கே.எஸ்.வீதிப் பகுதிகளில் உள்ள இரு உணவகங்கள் சுகாதாரக் குறைபாடுள்ள நிலையில் இயங்கி வந்தன. அப்பகுதியில் சோதனையில் ஈடுபட்டிருந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகச் சுகாதாரப் பரிசோதகரால் யாழ்.நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்புமூலம் இரு கடைகளிடம் இருந்தும் 8 ஆயிரம் ரூபா (5ஆயிரமும், 3ஆயிரமும) தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது என்றும் -

உடனடியாக இச்சுகாதாரக் குறைபாட்டை நிவர்த்தி செய்யவேண்டும் என்று கடைகளின் உரிமையாளர்கள் நீதிமன்றத்தால் பணிக்கப்பட்டுள்ளனர் என்றும் - யாழ்.மாநகரசபைச் சுகாதார வைத்திய அதிகாரி சு.மரியதாஸன் அறிவித்திருக்கிறார் (க-9)

# தென்மராட்சி நிலைமைகள் குறித்து அமைச்சர் ஜயலத்திடம் விவரிப்பு

## அவரிடம் மகஜரும் கையளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.15

தென்மராட்சியின் தற்போதைய நிலைமைகள், எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் போன்றவை தொடர்பாக அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவைச் சந்தித்த தென்மராட்சி மக்கள் நலச் சேவைக் கழகத்தினர் விரிவாக எடுத்துரைத்திருக்கின்றனர். -

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவை நேற்று முன்தினம் சந்தித்த மேற்படி கழகத்தின் குழுவினர், பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

பேராசிரியர் கந்தசாமி தலைமையிலான இந்தக் குழுவினர், மீள்குடியமர்வு தொடர்பாக காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து எடுத்துரைத்ததுடன், அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

அமைச்சரிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் -

கண்ணிவெடிகளை அகற்றுதல், அரச நிறுவனங்களை மீண்டும் சொந்த இடங்களில் இயங்கச் செய்தல், சேதமடைந்த வீடுகளைச் செப்பனிட உதவுதல், விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கைக்கு அனுமதித்தல், மீளத் தொழில்களை ஆரம்பிக்க மானியம் மற்றும் கடன் வசதிகளை வழங்குதல், மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு உணவு நிவாரணம் வழங்குதல், அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை ஊக்குவித்தல், சொத்துக்களுக்கு இழப்பீடுகள் வழங்குதல், சாவகச்சேரி நகரத்தை திட்டமிட்ட முறையில் மீளக் கட்டியமைத்தல் போன்ற பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. (க)

### சனி, ஞாயிறு நடக்கும் பரீட்சைகள்

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் நாளையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ள பரீட்சைகள் பற்றிய விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

☆ இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ளவர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (இரு தினங்களும்)

☆ நீதிமன்ற எழுதுநர் சேவை தரம் II உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (இரு தினங்களும்).

☆ நீதிமன்றச் சுருக்கெழுத்தாளர் சேவை தரம் II உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (சனி மட்டும்).

☆ விவசாய போதனாசிரியர் பரீட்சை (சனி மட்டும்).

☆ இலங்கை பிரிவெனா, தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கான முதலாம் வகுப்பு உள்ளீர்ப்புப் பரீட்சை (சனி மட்டும்)

☆ மீன்பிடி பரிசோதகர்களுக்கான நிரந்தரமாக்கல் முதல் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (இரு தினங்களும்).

இப்பரீட்சைகளில் தோற்றவுள்ளோருக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (க-10)

### நாளை

மாசி 04
சனிக்கிழமை
(16-02-2002)
திதி : சதுர்த்தி
முன்னிரவு 9.31 வரை.
நட்சத்திரம் : உத்தரட்டாதி
முற்பகல் 11.07 வரை
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 3.33 - 5.03
ராகுகாலம் : 9.33 - 11.03
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒருவரின் பணியையும் அவரது தோற்றத்தையும் வைத்து அவரது குணத்தை மதிப்பிட்டு விடமுடியாது

# நாட்டு நடப்பு

## அடித்துப் பேசிய அப்புக்காத்து

பாலினில் நீர் கலந்து விற்றதாக
பரமானந்தர் மீது பிடிவிறாந்து
பாலில் நீர் கலக்கவில்லையென்று
பலத்து வாதிட்டார் வழக்கறிஞர்
நல்ல நீருக்குள் பால் கலந்து விற்றால்
நீதிக்கு விரோதமாமோ? என்றார்

நல்ல நீருக்குள் பால் கலந்த
நிலைமையை விளக்கென்றார் நீதியாளர்
கொல்லும் கொடும் வெப்பம் தாங்காது
குடித்தது பசு கூட நீரை என்றார்
அல்லல் படாதீர், அம்மாட்டுக்கு
அதிகமோ சலரோகம் என்றார்
மெல்லனவே சிரித்த நீதியாளர்
மூன்று மாதம் சிறை விதித்தேன் என்றார்

வல்ல அப்புக்காத்தை நம்பி
வந்தது வினையே என்றார்
நல்ல நெடும் சிறை திறக்க
நாணியே உள்ளே சென்றார்.

*- விகடகவி.*

வடமராட்சி கிழக்குப் பகுதியை பார்வையிட்டு

# ஆய்வறிக்கை சமர்ப்பித்த பின்னரே மணல் அகழ்வது குறித்து முடிவு

## எடுக்க வேண்டுமென கோரிக்கை

வடமராட்சி,பெப்.15

வடமராட்சி கிழக்கில் கட்டடத் தேவைகளுக்காக மணல் அகழ்ந்தெடுப்பது தொடர்பான விடயம் சூழல் சுற்றாடல் அமைச்சு அதிகாரிகள் நேரில்வந்து பார்வையிட்டு ஆய்வறிக்கை சமர்பித்தபின்னரே முடிவெடுக்கப்படவேண்டும்.

வடமராட்சி கிழக்கின் பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கத்திடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

தும்பளையில் இயங்கும் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் கடந்த திங்கட்கிழமை மருதங்கேணி உதவி அரசஅதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை தலைமையில் நடந்த கலந்துரையாடலிலேயே இந்தக் கோரிக்கை பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளால் விடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.சிவாஜிலிங்கமும் கலந்துகொண்டார்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவிடம் இக்கோரிக்கையை எடுத்துக்கூறியும் சூழல் சுற்றாடல் அமைச்சின் கவனத்தின்கீழ் இவ்விடயத்தினைக் கொண்டுவந்து மேற்படி விடயத்தினை துரிதப்படுத்துவதாக அப்போது சிவாஜிலிங்கம் பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்.

வடமராட்சி கிழக்கு, குடத்தனை - மணற்காட்டுப் பகுதியில் மணல் அகழ்வது தொடர்பாக அப்பகுதி மக்களும் பொது ஸ்தாபனங்களும் ஆட்சேபனை தெரிவித்ததை அடுத்து கடந்த ஒருமாத காலத்துக்கு மேலாக அப்பகுதியில் மணல் அகழ்வு நடவடிக்கை நிறுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (க-182)

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான

# பாடசாலை நேரம் தொடர்பான புதிய நடைமுறை குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.15

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பாடசாலை நேரம் தொடர்பாக புதிய நடைமுறையை பின்பற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் தரம் தொடக்கம் ஐந்தாம் தரம் வரையுள்ள ஆரம்பப்பிரிவு வகுப்புகள் முதன்மை நிலை I, முதன்மை நிலை II, முதன்மை நிலை III என மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டு அவற்றுக்கான பாடசாலை நேரமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதன்மை நிலை Iஇல் முதலாம், இரண்டாம் தரம் உள்ளடக்கப்பட்டு அவர்களுக்கு வாரத்தில் 20 மணித்தியாலங்களும் -

முதன்மை நிலை IIஇல் மூன்றாம், நான்காம் தரம் உள்ளடக்கப்பட்டு அவர்களுக்கு வாரத்தில் 27 மணித்தியாலங்களும் -

முதன்மை நிலை IIIஇல் ஐந்தாம் தரம் உள்ளடக்கப்பட்டு அவர்களுக்கு வாரத்தில் 30 மணியத்தியாலங்களும் கற்பித்தல் நடைபெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதன்மை நிலை தொடர்பான பிரிவு வேறுபாடும் அவர்களுக்கான பாடசாலை நேரம் தொடர்பான அறிவுறுத்தல்களும் ஆரம்பக் கல்வி சீர்திருத்தம் - நடைமுறைப்படுத்தல் வழிகாட்டல் குறிப்பின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன. (க-10-11)

### சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகினால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கென நடத்தப்பட்ட பயிற்சி நெறியின் சான்றிதழ்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில கற்கைநெறியில் கலந்துகொண்டவர்களுக்கும் இதே தினத்தில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. (க-15)

### மெய்வன்மை பயிற்சி முகாம்

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் மெய்வன்மை வதிவிடப் பயிற்சி முகாம் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் 18ஆம் திகதி திங்கட்கிழமை வரையும் நான்கு தினங்கள் யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இப்பயிற்சிமுகாமை நெறிப்படுத்துவதற்கு வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே. டபிள்யூ. விமலராஜன் தலைமையிலான மூவர் இங்கு வருகைதந்துள்ளனர்.

இதன் ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராக இளைப்பாறிய விளையாட்டு அதிகாரி ஈ.ஏகாம்பரம் கலந்துகொள்ளவுள்ளார். 40 பேர் கலந்துகொள்ளவுள்ள இந்தப் பயிற்சி முகாமின் இணைப்பாளராக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் செயற்படவுள்ளார். (க-10)

# இல்ல மெய்வன்மைப் போட்டி

## யா/மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலை
## பருத்தித்துறை

*தலைவர் :* திருமதி செல்வமலர் சுந்தரேசன்
*(கல்லூரி அதிபர்)*
*இடம் :* கல்லூரி மைதானம்
*காலம் :* நாளை (16.02.2002) சனிக்கிழமை
பிற்பகல் 1.30 மணி
*பிரதம விருந்தினர் :* உயர்திரு. சு.பா.சுப்பிரமணியம்
*(மாவட்ட நீதிபதி, மல்லாகம்)*
*பரிசில் வழங்குபவர் :* திருமதி சிவமலர் சுப்பிரமணியம்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
*பருத்தித்துறை.* பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(சி-20737)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 1932 ❖ 06 ❖ 10



உதிர்வு 2002 ❖ 01 ❖ 16

அமரர்
## சீனிவாசம் சுப்பிரமணியம்

எம் அன்பு அப்பாவே!
ஒரு திங்கள் கழிந்தால் என்ன
ஒரு யுகந்தான் சென்றாலும்
உங்கள் நினைவு எமைவிட்டு மறையாது.
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*V.C.இற்கு அருகில்,*
*கோப்பாய்.* (552) - குடும்பத்தினர்.


## குடாஹெட்டி பிரியாவிடை

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.பொலீஸ் நிலைய அத்தியட்சகர் சி.என்.குடாஹெட்டி நேற்று முதல் மொனராகல மாவட்டத்திற்கான தலைமைப் பொலீஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு தொடர்ந்தும் சேவைசெய்யும் வாய்ப்பை தாம் இழப்பதை நினைத்து மனம்வருந்துவதாகவும் -

தன்னுடன் ஒத்துழைத்த சகல தரப்பினருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், வாழ்த்துவதாகவும் குடாஹெட்டி தெரிவித்தார். (க-9)

## தபால் மூல வாக்களிப்பு திகதியில் மாற்றம்

கொழும்பு,பெப்.15

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு மார்ச் 7ஆம் 8ஆம் திகதிகளிலேயே நடைபெறுமென்று உதவித் தேர்தல் ஆணையாளர் சேனரட்ண தெரிவித்துள்ளார்.

மார்ச் 13ஆம், 14ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## பரீட்சைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,பெப்.15

பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் எச்.என்.டி.ஏ., எச்.என்.டி.சி. ஆகிய பாடநெறிகளுக்கான இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளுக்கான இறுதிப் பரீட்சைகள் (பழைய பாடத்திட்டம்) அடுத்த மாதம் நடத்தப்பட உள்ளன. இதற்கான விண்ணப்பங்களைப் பரீட்சைத் திணைக்களம் கோரியுள்ளது. (ம)

## தையல் பயிற்சி

தென்மராட்சி,பெப்.15

வடக்கு - கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்கள அனுசரணையுடன் பளைப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்திப் பிரிவினரால் படித்த யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்பு அண்மையில் புலோப்பளையில் உள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பளைப் பிரதேச செயலர் சுபத்திசிகாமணி இந்த தையல் பயிற்சி வகுப்பை ஆரம்பித்துவைத்தார். (க-117)


# சுன்னாகம் வர்த்தக சங்கத்தின்
## வருடாந்தப் பொதுக்கூட்டமும், நிர்வாகசபைத் தெரிவும்

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை (16.02.2002) சனிக்கிழமை பிற்பகல் 2.30 (புதிய நேரம்) மணிக்கு சுன்னாகம் வர்த்தக சங்கப் பணிமனையில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.


சகல அங்கத்தவர்களும் பிற்பகல் 12.30 (புதிய நேரம்) மணியுடன் வர்த்தக நிலையங்களைப் பூட்டி பொதுக்கூட்டத்திற்கு வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ந.சண்முகவேல் ந.அரசரத்தினம்
செயலாளர் (598) தலைவர்



# 31ஆவது நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தாயின் மடியில் 18 - 08 - 1915



இறைவன் அடியில் 16 - 01 - 2002

அமரர்
## காசிப்பிள்ளை தில்லைநாயகம்

*(உரிமையாளர், இந்திரா ஸ்ரோர்ஸ், காங்கேசன்துறை)*

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாகத் திகழ்ந்தவரே!
அருமை அப்பாவே! ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

இன்று (15-02-2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியம் மற்றும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, நண்பகல் மதியபோசனம் ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*☞ இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுச் சமுகமளிக்குமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.*

திருமதி தி.இரத்தினம் (மனைவி),
*மூத்ததம்பி வீதி,* திரு.திருமதி சந்திரகுமார் (மகள்-பவா).
*மானிப்பாய்.* (583) திரு.திருமதி உதயகுமார் (மகள்-விஜி).



# எம்மை விட்டகன்று விண்ணைச் சென்றடைந்து அமரத்துவம் எய்திய எம் தெய்வத்துக்கு
# எமது ஓராண்டு அஞ்சலி

எமக்காக - எமது
சுகங்காக்க வந்தது
1966-12-26



எமைவிட்டு - எமது
மனம் ஏங்கச் சென்றது
2001-02-26

# திருமதி சித்ரா (கலா) மகாலிங்கம் அவர்கள்

**திதி: 15-02-2002**

சாகாத வயதினிலுன் சாவுஅது வந்ததாலே
தீராத வேதனைகள் துளைத்ததம்மா என்மனதை
வேராகி எனது வாழ்வில் என்னைவாழ வைத்தவளே!
நீறாகிச் சென்றிட்டாயே என்னையும்நீ நீறுஆக்கு
மறுபடியும் மனிதனாக நான்பிறக்க வேண்டும்அன்பே
என்பதியில் நீயேஎந்தன் மனைவியாக வேண்டுமம்மா!
- உன் நினைவுச் சுவர்களில் உன் கணவர்.

அம்மாநீங்கள் வாருங்கோ வந்துஎம்மைப் பாருங்கோ
அம்மாநீங்கள் இல்லாமல் வாழஎம்மால் முடியுமோ?
அம்மாநீங்கள் சொல்லுங்கோ எங்குநீங்கள் போனீர்கள்?
அம்மாநீங்கள் எம்மைஏன் மறந்திட்டீர்கள் நியாயமா?
உங்களது படத்தைத்தான் நிதமும்பார்த்து அழுகிறோம்
எங்களது அழுகையை அடக்கிடாமல் அழுகிறோம்!
- உங்கள் பாசத்தின் பிள்ளைகள்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி - யாழ்ப்பாணம். (670)

# இதய அஞ்சலி

16.01.2002இல் சிவபதம் அடைந்த
எமது சக உத்தியோகத்தர்
திருமதி சி.தனலட்சுமியின் அன்புத் தந்தை
**அமரர் செ.சுப்பிரமணியம்**
அவர்களின் 31ஆம் நாள் நினைவுதினமாகிய இன்று அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கைதடி*
*அரச முதியோர் இல்லம்.*
அதிபரும்,
உத்தியோகத்தர்களும். (699)



வட்டு.கிழக்கு, வட்டு.வடக்கு, வட்டு.தென்மேற்கு,
வட்டு.தெற்கு, வட்டு.மேற்கு சங்கரத்தை ஆகிய கிராம
உத்தியோகத்தர் பிரிவு மக்களின் ஆதரவில்
**வலிகாமம் மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை**
நடத்தும்

# மாபெரும் கலைவிழா

*காலம்:* நாளை (16.02.2002) சனிக்கிழமை பிற்பகல் 2 மணி
*இடம்:* பிரதேச சபை திறந்தவெளியரங்கு - வட்டுக் கோட்டை (வட்டு. மத்திய கல்லூரி முன்பாக)
*தலைமை:* திரு.செ.இரத்தினம் அவர்கள்
*(பிரதேச செயலர், வலி.மேற்கு)*
*பிரதம விருந்தினர்:* இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்கள்
*சிறப்பு விருந்தினர்கள்:* ஒப்புரவாளர் து.வைத்திலிங்கம் அவர்கள்
*(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்)*
திரு.கா.சந்திரராசா அவர்கள்
*(முன்னாள் பிரதேச செயலர், வலி.மேற்கு)*

விளம்பர அன்பளிப்பு:
## சச்சியா இரும்பகம்
தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை.
எம்மிடம் மின் உபகரணங்கள், சிமெந்து, துவிச்சக்கரவண்டி உதிரிப் பாகங்கள், கட்டடப் பொருள்கள் என்பவற்றை சகாய விலையில் பெற்றுக் கெள்ளலாம்.

அன்பர்கள், கலாரசிகர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரதேச செயலகம்,*
*வலிகாமம் மேற்கு.*
- கலாசாரப் பேரவை விழாக் குழுவினர்.

நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்:
இறைவணக்கம்:
தமிழ்த்தாய் வாழ்த்து:
பாவோதல்: **ப.திருவரங்கன்** *(யாழ்ப்பாணக் கல்லூரி)*
வரவேற்பு நடனம்: வட்டு.மத்திய கல்லூரி மாணவர்கள்
ஆசியுரை: **பிரம்மஸ்ரீ அ.நாகராசசர்மா**
*(பிரதம குரு, ஸ்ரீமஹாலிங்க சுவாமி கோயில்)*
**வண.பிதா சு.ஜெபநேசன் அடிகளார்**
*(தென்னிந்தியத் திருச்சபை)*
மங்கள இசை: கலாசூரி **என்.கே.பத்மநாதன்** குழுவினர்,
வட்டு. **என்.இராமநாதன்** குழுவினர்
அபிநய நடனம்: வட்டு.வடக்கு கண்ணன் பாலர் பாடசாலை
வட்டு.திருநாவுக்கரசு வித்தியாலய மாணவர்களும்,
வட்டு.பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை மாணவர்களும்
இணைந்து வழங்கும்
**'அபிநய நடனம்'**
பாட்டு: வட்டு.சுப்பிரமணிய வித்தியாலய மாணவர்கள்
இசைக்கச்சேரி: சங்கீத ரத்னம் **திருமதி ஜீவா இரத்தினசபாபதி**
*(சென்னைப் பல்கலைக்கழகம்)*
வயலின்: **செல்வி அ.சந்தானலட்சுமி**
மிருதங்கம்: **திருமதி ஜெயம் கானகோகிலம்**
*(இசைக்கலைமணி, யாழ்.பல்கலைக்கழகம்)*
வரவேற்புரை:
தலைமையுரை:
கலைஞர்கள் கௌரவிப்பு:
பிரதம விருந்தினர் உரை:
சிறப்பு விருந்தினர் உரை:
நன்றியுரை:
இருவயலின் இசை (வயலின் - சோலோ)
இசைஞான வாரிதி **திரு.வி.ஆர்.ராதாகிருஷ்ணன்** *(வயலின்)*
**செல்வி ராதாகிருஷ்ணன் சையிந்தவி** *(வயலின்)*
**திரு.எஸ்.துரைராசா** *(மிருதங்கம்)*
**திரு.கே.ஆனந்தகோபன்** *(கெஞ்சிரா)*
**திரு.எஸ்.செல்வரத்தினம்** *(கடம்)*
**திரு.எஸ்.ராசு** *(முகர்சிங்)*
வட்டு.இந்துக் கல்லூரி மாணவர்கள் வழங்கும்
தனிப்பாடல், குழுப்பாடல், தனிநடனம், குழுநடனம்
பரதநாட்டியம்: **குலசேகரம் சுமங்கலை**
*(மாணவி, யாழ்ப்பாணக் கல்லூரி)*
வட்டு.மத்திய கல்லூரி மாணவர்கள் வழங்கும்
தனிநடனம், குழுநடனம், குழுப்பாட்டு
இசைக்கச்சேரி: சங்கீத ரத்னம் **செல்வி வினாசித்தம்பி இராஜேஸ்வரி**
*(உப அதிபர், வட்டு.மத்திய கல்லூரி)*
வயலின்: சங்கீத ரத்னம் **திருமதி சங்கர் தங்கராணி**
மிருதங்கம்: இசைக்கலைமணி **திருமதி ஜெயம் கானகோகிலம்**
நடன அரங்கம்:
நாட்டியக் கலைமணி **திருமதி யசோதா பிரேமச்சந்திரன்**
*(ஆசிரியர், சங்கானை சிவப்பிரகாச ம.வி.)* அவர்களின்
மாணவர்கள் வழங்கும்
**'நிருத்தியாஞ்சலி'**
வில்லிசை: யாழ்ப்பாணக் கல்லூரி வில்லிசைக் குழுவினர் வழங்கும்
**'சந்திரமதி புலம்பல்'**
*(தேசியத் தமிழ்மொழித்தினப் போட்டியில் தங்கப் பதக்கம் விருது பெற்றது - 2001)*
இசை நாடகம்: யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் தயாரித்து வழங்கும் **"சத்தியவான் சாவித்திரி"**
*(இசை நாடகம்)* (சி-20726)


## இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதர் நியமனம்

கொழும்பு,பெப்.15

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரக ஸ்ரெபன் ஏவான் நியமிக்கப் பட்டுள்ளதாக அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் பிரிட்டிஷ் தூதராகப் பணியாற்றிவரும் இவர் எதிர்வரும் ஜூலை மாதம் கொழும்பு வந்து கடமையைப் பொறுப்பேற்பார்.

தற்சமயம் இலங்கையில் தூதுவராகப் பணியாற்றும் லிண்டா டபீலட் அம்மையார் வேறு ஒரு நாட்டுக்கு தூதராக மாற்றப்படுகிறார். (ஐ-3-9)

## யாழ்.இந்துவின் சேவைக் கழக ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.இந்துக்கல்லூரி சேவைக் கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவும், "மனிதம்" நூல் வெளியீடும் இன்று காலை 10.30 மணி முதல் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சேவைக்கழகத் தலைவர் ச.பாரதி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும், வைத்திய கலாநிதி வி.யோகேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

நூல் ஆய்வுரையை ஆசிரியர் ந.சிவராஜாவும் காப்பாளர் உரையை கல்லூரி அதிபர் அ.சிறிக்குமரனும் நிகழ்த்துவர். பரிசில்களை திருமதி ஜெகதீஸ்வரி வைத்திலிங்கம் வழங்குவார்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறும். (க-7)

## தம்பதியர் காயம்

தென்மராட்சி,பெப்.15

வல்லைச் சோதனைச் சாவடிக்கு அண்மையில் இடம்பெற்ற படையினரின் பிக்கப் வாகனம் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற கணவனும் மனைவியும் காயமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மிருசுவில், விடத்தற்பளையைச் சேர்ந்த ஜெயராசா செல்வமணி (வயது - 32) என்பவர் கை முறிந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரது கணவனான த.ஜெயராசா (வயது - 37) முகத்திலும் கையிலும் காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளார். (க-117)

## தும்பளையில் திருட்டு

தென்மராட்சி,பெப்.15

தேவாலய உற்சவ நிகழ்வுக்கு வீட்டார் சென்றிருந்தசமயம் வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த தங்க நகைகள், ரொக்கப்பணம் உட்பட பெறுமதியான பொருள்கள் ஆகியவற்றை சூறையாடிச் சென்ற சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பருத்தித்துறை தும்பளையில் இடம்பெற்றது.

சட்டத்தரணி ஒருவரின் வீட்டிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, கரவெட்டி உச்சில் என்னும் பகுதியில் வீட்டிலுள்ளோர் உறக்கத்தில் இருந்தவேளையில் ஜன்னல் கம்பியை வளைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதியான பொருள்களை அபகரித்துச்சென்ற சம்பவமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. (க-117)

## அபிவிருத்தி தொண்டர்களுக்கு மீண்டும் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.15


யாழ.மாவட்ட பிரதேச செயலகங்களில் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தித் தொண்டர்களுக்கான பயிற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடமராட்சி தெற்கு, மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலக பிரிவில் இரண்டாம் பிரிவில் பயிற்சிபெற்ற அபிவிருத்தித் தொண்டர்கள் அனைவரையும் எதிர்வரும் 20ஆம் திகதி காலை 10 மணிக்கு பிரதேச செயலகத்திற்கு வருகைதருமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

வழங்கப்பட்ட பயிற்சிகள் இடைநிறுத்தப்பட்டதால் தொழில்பயிற்சியினை முழுமையாகப் பெற்றுக்கொளளாத அபிவிருத்தித் தொண்டர்கள், இப்பயிற்சியினை மீண்டும் ஆரம்பிக்குமாறும் புனர்வாழ்வு அமைச்சருக்கு மகஜர் அனுப்பி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-117)


# 31ஆவது நாள் நினைவஞ்சலியும்
சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
25
☆
04
☆
1924



மறைவு
17
☆
01
☆
2002

அமரர்
## இளையவன் சண்முகம்
*(ஓய்வுபெற்ற ஊழியர், காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)*

17.01.2002 இல் இறைவனின் திருவடி நிழலில் நித்திய ஆறுதல் தேடிய அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது மரணச் சடங்குகளில் கலந்துகொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும், துயர்பகிர்ந்தோர், உதவிகள் புரிந்தோர், தகனக்கிரியைகளில் கலந்துகொண்டோர் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை 27ஆம் இலக்க வார்ட் வைத்தியர்கள், தாதிமார், ஊழியர்கள் மற்றும் சென்.ஜோனஸ் அம்புலன்ஸ் ஊழியர்கள் அனைவருக்கும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். நாளை (16.02.2002) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
மகள் - ஆ. பரமேஸ்வரி,
மருமகன் - க. ஆனந்தராசா,
பேரப்பிள்ளைகள்.
*சந்தை ஒழுங்கை,*
*சுன்னாகம்.* (644)



# தசாக அறிவித்தல்

கடந்த 07.02.2002 வியாழக்கிழமை சிவபதப்பேறு பெற்ற
எமது கனிஷ்ட புத்திரி



செல்வி
## நகுலேஸ்வரக் குருக்கள் சிவகாமசுந்தரி
அவர்களின்

*தசாகம்:* 16.02.2002 சனிக்கிழமை காலை 9.00 மணி
*ஏகோதிஷ்டம்:* 17.02.2002 ஞாயிற்றுக்கிழமை
*சபிண்டீகரணம்:* 18.02.2002 திங்கட்கிழமை
*கிரகயக்ஞம்:* 19.02.2002 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும்.

தயவுசெய்து இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இளவாலை வடக்கு,*
*இளவாலை.* (681)
- சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்
*(நகுலேஸ்வர ஆதீன கர்த்தா)*



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
05
-
05
-
1932



உதிர்வு
16
-
01
-
2002

## திருமதி செல்லையா வள்ளிப்பிள்ளை

இறைவன் திருவடி நிழலில் நித்திய ஆறுதல் தேடிய அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்திகேட்டு ஓடோடிவந்து, எமக்கு உதவி செய்த அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (15.02.2002) வெள்ளிக்கிழமை எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"அன்னை இல்லம்",*
*அளவெட்டி கிழக்கு,*
*கும்பழை.* (689)
*பிரிவால் துயருறும்:*
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## அறை வாடகைக்கு

பலாலி வீதியில் ஆலடிச் சந்திக்குக் கிட்டவாக பல்கலைக்கழக மாணவிகளுக்கு மட்டும் அறை வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: விள. இல. 1461, மே/பா உதயன். (660)

## மணமகன் தேவை

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த, 1972 ஆம் ஆண்டு பிறந்த, ரேவதி நட்சத்திரம், லக்கினத்தில் செவ்வாய் உள்ள, படித்த மணமகளுக்கு பண்பான குடும்பத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. தொழில் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ இருக்கலாம். ஸ்பொன்சர் செய்யக் கூடியவராக இருக்கவேண்டும். தொடர்பு: விள.இல.1462, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (679)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1975ஆம் ஆண்டு, செவ்வாய்க் குற்றமற்ற, G.C.E.O/L முடித்து மனையியல், தையல் ஆகிய சொந்தத் தொழில்செய்யும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. வெளிநாடு, உள்நாடு விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல.1463, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (679)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972இல் பிறந்த, சுவாதி நட்சத்திரம், மின்சக்தி பொறியியலாளராகப் பணியாற்றும் மணமகனுக்கு அழகிய, படித்த மணப்பெண் தேவை (கணக்காளர் விரும்பத்தக்கது). ஜாதகக் குறிப்பு, புகைப்படத்துடன் தொடர்பு: விளம்பர இல. 1460, மே/பா உதயன். (588)

## விற்பனைக்கு

நொக்கிய காண்ட் செற் தொலைபேசியும் லெமினேற்றிங் மெஷினும் Fuji Japan விற்பனைக்கு உண்டு. தொடர்பு: குமார், கொக்குவில் சந்தி, கொக்குவில். T.P.: 2961, 3200 (677)

PIONEER BOX (4 WAY), SONY T.V. KU 2511, 2062, 2090, டெக் SR.38, LG. G30, FISHER AMP CA 150 W என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 351, கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (696)

நல்ல நிலையிலுள்ள வயலின், 44 கட்டை கால் மிதி ஹார்மோனியம் என்பன உடனடியாக விற்பனைக்கு உண்டு. சனி, திங்கட்கிழமைகளில் பார்வையிடலாம். 204, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (706)

நல்ல நிலையிலுள்ள இரண்டு சிங்கர் தையல் மெசின்கள், லேடீஸ் சைக்கிள் (ஏசியா) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-75, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம். (708)

## தவறிவிட்டது

இல.19, நக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த செல்லத்துரை நிர்மலாவதி என்பவருடைய தேசிய அ.அ.(இல. 585654213V), விசேட அ.அ.(இல. 0901012961) என்பன யாழ்.நவீன சந்தைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (707)

## ஒத்துமாறல்

யாழ்ப்பாண கல்வியியற் கல்லூரிக்கு ஆரம்பக்கல்விக்கான அனுமதி பெற்ற (2002) மாணவர் எவராயினும் மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரிக்கு ஒத்துமாறிச்செல்ல விரும்பினால் உடன் தொடர்புகொள்ளவும். வி.இல.1464, மே/ப.உதயன், யாழ்ப்பாணம். (707)

## அச்சுவேலியில் செயலமர்வு

அச்சுவேலி,பெப்.15

முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி ஆசிரியர் கையேடு அறிமுகச் செயலமர்வு நான்கு தினங்கள் தொடர்ந்து அச்சுவேலி மத்திய கல்லூரியில் நடைபெறுகின்றன.

நேற்று வியாழக்கிழமை தொடக்கம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் நடைபெறும். இந்தச் செயலமர்வில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு கொத்தணி பிரிவில் உள்ள முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயிற்சிபெறுகின்றனர். (க-11)

---

மானிப்பாய் வட்ட / இணுவில் லயன்ஸ் கழகங்கள்

We Serve

சிவத்தமிழ்ச் செல்வி

தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின்

துர்க்கா தேவஸ்தான அறக்கொடைச் சபையின்

அனுசரணையுடன் நடத்தும்

வசதி குறைந்த கண்பார்வைக் குறைபாடுள்ள

மாணவருக்கான

**கண்பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கும் சேவையும்**

முன்னைய அறிவித்தலின்படி இச்சேவையைப் பெற பதிவுசெய்த மாணவர்களையும், பதிவுசெய்யத் தவறிய - வசதி குறைந்த - மாண வர்களையும் தொடர்புகொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

காலம் : 17-02-2002 காலை 9.30 மணி (புதிய நேரம்)

இடம் : இணுவில் மத்திய கல்லூரி, K.K.S. றோட்.

லயன் S.S.தங்கராஜா

*சேவை இணைப்பாளர்*

(C/20739)

---

மத்திய - மாகாண

அரச சுருக்கெழுத்தாளர்,

தட்டெழுத்தாளர் சங்கம்

**'சுருக்கெழுத்து - தட்டச்சுத் தொழில்நுட்பக் கலை வரலாறு' நூலின்**

## அறிமுகவிழா

*இடம்* : நாவலர் கலாசார மண்டபம்

*காலம்* : நாளை (16.02.2002)
சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி

*தலைவர்* : திரு.ரி.கே.இராஜேந்திர ராவ்
*(சங்கத் தலைவர்)*

*சிறப்பு விருந்தினர்:* திரு.வ.கோவிந்தபிள்ளை
*(இளைப்பாறிய உதவிப்பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்)*

*கருத்துரைகள்:* 1. திரு.சி.குலசிங்கம்
*(தலைவர், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்)*
2. திரு.கே.வி.சிவச்சந்திரதேவன்
*(நூலாசிரியர் - செயலாளர், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்)*

*அறிமுகவுரை:* திருமதி கமலா பாலசுப்பிரமணியம்
*(ஓய்வுபெற்ற சிரேஷ்ட சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் போதனாசிரியர், யாழ். தொழில்நுட்ப நிறுவனம்)*

*சங்க அங்கத்தவர்கள் அனைவரையும், ஆர்வலர்களையும் இந்நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

இ.இரத்தினசிங்கம்
பொதுச் செயலாளர்.

(C/20727)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி திலகவதி வேலாயுதபிள்ளை

திருமதி திலகவதி வேலாயுதபிள்ளை 12.02.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் செல்லையா வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும் யாழ்.இணுவில் காலஞ்சென்ற தம்பு - தையல்நாயகி தம்பதியினரின் அன்பு மகளும் யாழ்.கொக்குவில் காலஞ்சென்ற செல்லையா - பொன்னம்மா தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற மகாலக்சுமி மற்றும் மகாதேவன், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரமகுமார் (பொறியியலாளர் - நீர்ப்பாசனத் திணைக்களம்), காலஞ்சென்ற பிரேமலோஜினி மற்றும் பிரேமசந்திரன் (உதவிச் செயலாளர் - தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு), பிரேமரஞ்சன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - வீதி அபிவிருத்தித் திணைக்களம்), பிரேமதயாளன் (பட்டதாரி ஆசிரியர் - கிண்ணியா மத்திய கல்லூரி, தேசிய பாடசாலை) ஆகியோரின் பாசமிகு அன்னையும், சுகந்தினி, ரேவதி (மேல் நீதிமன்றம் - வவுனியா), உமாதருசினி, யருமிலா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பூமணி, சண்முகசுந்தரம், பரமலிங்கம், தவமணி, ராதாதேவி ஆகியோரின் மைத்துனியும் புராதனி, மர்த்தனி, கிருஷ்ணானி, பிரேமநிர்த்தனன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (2002.02.16) சனிக்கிழமை 50/5, கல்லூரி வீதி இல்லத்தில் இருந்து காலை 10 மணியளவில் தகனக் கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், குடும்பத்தவர்கள்.

*இல. 50/5, கல்லூரி வீதி,*
*திருகோணமலை.* (C/20742)

## டேவிட் முடியப்பு

*(இளைப்பாறிய ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி)*

நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட டேவிட் முடியப்பு அவர்கள் கடந்த 12.02.2002 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டேவிட் - அன்னம்மா தம்பதியினரின் மூத்த மகனும் மொனிக்காவின் அன்புக் கணவரும் ஜோண்சன் (மஸ்கன்ஸ் லிமிட்டட், கொழும்பு), டேவிற்சன் (கனடா), சாம்சன் (கனடா), றொபின்சன் (கனடா), திருமதி ஆன்றோஸ் மேவின் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி லூர்த்தம்மா மரியாம்பிள்ளை, திருமதி கர்த்தரின் கலியாணராமையர், காலஞ்சென்ற ஆரோக்கியநாதன் மற்றும் அருட்செல்வி தேவநேசம் A.C. (அதிபர், சென்.பெனடிக்ற், வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் (2002.02.17) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.ஜெயசீலன்
(ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி)

*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.* (711)

---


# அறிவித்தல்

*தயவு செய்து கவனிக்கவும் ஜப்பானைச் சேர்ந்த* Nippon Antenna Company, Nippon America Booster*களைத் தயாரிப்பதில்லை.*

KOBE Antenna Booster*களைத் தயாரிக்கும்* SHOWA Company Limited *ம் நிப்போன்அமெரிக்கா பூஸ்டர்களைத் தயாரிப்பதில்லை.*

**KOBE Booster பெட்டிகளில் வரும் இந்தப் போலி பூஸ்டர்களுக்கு நாம் எந்த பொறுப்பையும் ஏற்கமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

3 வருட உத்தரவாதம்

அசல் முதல் தர விற்பனைச் சாதனை கொண்ட

**கோபே அன்டெனா பூஸ்டர்**

என்று கேட்டு வாங்குங்கள்

**LANKA NIPPON**

No.18, Keyzer St, Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc,Colombo-04 Tel:589992.

AVAILABLE ISLAND WIDE


---

# கண்ணீர் அஞ்சலி

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் தும்பளை பருத்தித்துறையை புகுந்த இடமாகவும் கொண்ட

## பர்னாந்து அமிர்தநாதர்

[10.02.2002] ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவில் காலமானார்.
எங்களுடன் அன்புடனும் பண்புடனும் நல்ல நண்பனாய்,
தலைவனாய் எம்மோடு இருந்தார்.

ஊர் சென்று
திரும்பி வருவேன் என்று
சென்ற தலைவர், திரும்பி
வராத இடம் சென்றீர்!
*ஓம் சாந்தி!*

நண்பர்கள், பருத்தித்துறை.

(C/20741)

---

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

பூமியில் மலர்ந்த நாள்
25 - 10 - 1949



எங்களைக் கதறவிட்டுச் சென்ற நாள்
15 - 02 - 2001

## Dr. செல்வி நிறஞ்சனா சேனாதிராசா
(உஷா)

திதி: 06-03-2002

அன்பே! உஷா நீர் எங்களை எல்லாம் துடிதுடிக்க விட்டுச் சென்று ஆண்டொன்று ஆனதம்மா; நீர் எங்கள் இரு வீட்டாருக்கும் முதல் பேர்த்தியாகவும் அப்பா, அம்மாவுக்கு முதல் முத்தாகவும், மாமா, மாமி, சின்னம்மாமார் ஆகியோருக்கு மகளாகவும், மருமகளாகவும் நீர் வருவதை எண்ணி உமது வரவை ஆவலுடன் நாள்தோறும் எதிர்பார்த்த வண்ணம் மனக்குதூகலத்துடனும், ஆர்வத்துடனும் காத்திருந்தோம். நீரும் இப்புவியில் ஜென்மமானீர். அப்பப்பா! கேட்க வேண்டுமா எல்லோரின் சந்தோஷத்தையும்... அவ்வளவு மகிழ்ச்சி. அப்படி வரவேற்கப்பட்ட நீர், திடீரென எங்களைத் துடிதுடிக்க விட்டுச்சென்றதேனம்மா? உமது பிரிவுத் துயரைத் தாங்கமுடியவில்லையே! எங்கள் உள்ளங்களின் அலைமோதலைத் தவிர்க்க எங்கள் குடும்பத்தில் யாரிடமாவது வந்து பிறந்துவிடு! மீண்டும் வருவாயா? உஷா வரவேண்டும்! எங்கள் உள்ளக் கொதிப்பை அடக்க வரவேண்டும்! உஷா வந்துவிடு! வந்துவிடு உஷா! உஷா நீ வந்துவிடு, கட்டாயமாக வரவேண்டும். வருவாயா?

உமது பிரிவால் துயருறும்:
E.S.S.அருணாசலம் குடும்பம்
(அப்புத்துரை)

*'மதுரவாசா',*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (704)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின்
இளைப்பாறிய இணை பிரதி அதிபரும்,
மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தான
அறங்காவலர் சபைத் தலைவரும்,
சிறந்த சமூக சேவையாளனுமாகிய

உயர்திரு.

**இளையதம்பி ஆனந்தன் (J.P.)**

அவர்கள் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு அவரைப் பாராட்டுவதோடு அவர்தம் வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி. (C/20750)
வே.கந்தசாமி
குடும்பத்தினர்.



## கண்களுக்கு ஒரு பெருவிருந்து

மணிக்குரலின் மணிவதனன் ஜெயச்சித்திரா
7 ஆம் ஆண்டு ஞாபகார்த்த கலைப் போட்டிகள்
17.02.2002 ஞாயிறு பிற்பகல் 1 மணிக்கு
யாழ். மத்திய கல்லூரி கலையரங்கில்

☆ நிஷாளந்தா ஜு வல்லறி ஆதரவில் பாட்டுக்குப் பாட்டு போட்டி
☆ ஸ்ரீகாந்த் எசன்ஸ் & குறோசறிஸ் ஆதரவில் தேன்'சைமழை போட்டி
☆ விவேகா நகைமாடம் ஆதரவில் பிறேக் டான்ஸ் போட்டி
☆ பவானி விலாஸ் ஆதரவில் நவரச கதம்பம்
☆ பரிமளா ஸ்ரோர்ஸ் ஆதரவில் சாரங்காவின் ராஜராகம்

ரிக்கெட் ரூபா 25/- கிடைக்குமிடம்:
நிஷாளந்தா ஜு வல்லறி, லிங்கன் கிறீம்ஹவுஸ் அருகில்
நிகழ்ச்சித்தொகுப்பு: மணிக்குரல் V.S.சற்குணன், சற்பிரசன்னா
(C/20752)



பனை அபிவிருத்திச் சபை, திக்கம் வடிசாலை

## கூறு விலை கோரல்

பாரிய மரக் கொள்கலன்களை அதற்குரிய அடித்தளங்களில் தூக்கி வைத்தல்

திக்கம் வடிசாலையில் உள்ள பாரிய மூன்று (3) மரக் கொள்கலன்களை அவற்றுக்குரிய அடித்தளத்தில் தூக்கி வைப்பதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. மேலதிக விவரங்களை திக்கம் வடிசாலைக்கு நேரடியாக வருகை தந்து வடிசாலை முகாமையாளருடன் தொடர்புகொண்டு 01.03.2002இற்கு முன்னர் கூறுவிலைகளை வடிசாலை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பனை அபிவிருத்திச்சபை,
திக்கம், அல்வாய். (C/20755)
பொ.சிவபாதம்,
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.



## வேம்படி மகளிர் கல்லூரி
## வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி - 2002

*காலம்:* நாளை (16-02-2002) சனிக்கிழமை 1.30 மணி
*இடம்:* கல்லூரி மைதானம்

பிரதம விருந்தினர்கள்: திரு.து.வைத்திலிங்கம்
*(மேலதிக அரசாங்க அதிபர் - யாழ்ப்பாணம்,*
*பிராந்திய இணைப்பாளர், வடக்கு - கிழக்கு மாகாணம்)*

திருமதி ஜெ. வைத்திலிங்கம்

*பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள்*
*அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.
(C/20753)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
த.செல்வகுமாரின் அன்புத் தந்தையார்

**கதிரேசு தங்கவேல்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இறுதிவருட முகாமைத்துவ மாணவர்கள்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*
(728)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி சகுந்தலாதேவி சண்முகரெட்ணக்குருக்கள்
(மணி ஐயா)
சங்கானையைப் பிறப்பிடமாகவும்
கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட
கொழும்பு - தம்பையா சத்திரம் -
மாளிகாவத்தை பிள்ளையார் கோயில் ஆகியவற்றின்
முன்னாள் குருவாகிய
*சிவஸ்ரீ கி.சண்முகரெட்ணக்குருக்கள்*
அவர்களின் அன்பு மனைவி

**திருமதி சகுந்தலாதேவி அம்மா**

அவர்கள் கடந்த 10.02.2002 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கொழும்பில் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
சிவஸ்ரீ கி.கைலாசநாதக்குருக்கள்
பிள்ளையார் கோயிலடி, சங்கானை. (720)

## வீதி விபத்துகளில் இருவர் காயம்

வெவ்வேறு இடங்களில் நேற்று இடம்பெற்ற இரு விபத்துகளில் இருவர் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நவாலியில் வீதியின் குறுக்காக ஓடிய மாடும் மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளை செலுத்திவந்த நவாலியைச் சேர்ந்த ஜெகநாதன் சிவராசா (வயது29) என்பவர் காயமடைந்தார்.

நல்லூர் நாயன்மார்கட்டு வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்ட மற்றொரு விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றுவரான புலோலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஜெபநேசன் (வயது48) என்பவர் காயமடைந்தார். (ஒ-15)

## நெல்லியடியில் இன்று 'பாரதி' திரைப்படம்

யாழ்ப்பாணம்,பெப்.15

சலன சித்திரம் அமைப்பின் வடமராட்சிப் பிரதேசக் கிளையின் ஏற்பாட்டில் 'பாரதி' தமிழ்த் திரைப்படம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நெல்லியடி மஹாத்மா திரையரங்கில் காண்பிக்கப்படவிருக்கின்றது. (ஒ-3)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்மாவட்டப் பிரதேச அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை இந்நிகழ்வில்உரையாற்றுவார்.(ஒ-3)

## 155 தபாற்பொதிகள் யாழ்.வந்தன

யாழ்ப்பாணம்,பெப்.15

நேற்று காங்கேசன்துறைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 155 தபாற்பொதிகள் எடுத்துவரப்பட்டன.

இதேகப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 71 தபாற்பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தபாற்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடற்படையினரின் சோதனைகள் முடிவடையாத காரணத்தினால் சுமார் 90 தபாற்பொதிகள் திருகோணமலை பிரதம தபாலகத்தில் உள்ளதாகவும் அவர் மேலும்தெரிவித்தார். (ஒ-10)

## நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம்,பெப்.15

தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா நேர்முகத் தேர்வு நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகியவற்றில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற நேர்முகத தேர்வில் கலந்துகொள்ளாதவர்கள் இதில் கலந்துகொள்ளலாம். அத்துடன் 2001ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதிக்கு முன்பு பட்டம் பெற்ற நிரந்தர ஆசிரியர்களில் ஏற்கனவே விண்ணப்பம் செய்யாதவர்களும் தேர்வில் கலந்துகொள்ளலாம் என்று சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சண்முகநாதன் அறிவித்துள்ளார். (க-10)


நிறஞ்சனாஸ்
சங்கானை
முரளி, தேவயானி, ரம்பா நடித்த
ஆனந்தம்
காட்சிகள்: 11.00, 2.30, 5.30
(C/20752)

நாகம்ஸ்
சுன்னாகம்
அனேக ரசிகர்களின்
வேண்டுகோளிற்கிணங்க இன்று மட்டும்
விஜய், பூமிகா, நடித்த
பத்ரி
காட்சிகள்: 11.00, 2.00 (புதிய நேரம்)
நாளை முதல் தவசி
(716)

ராஜா
யாழ்ப்பாணம்
17.02.2002 ஞாயிறு வரை மட்டும்
அஜித், ஜோதிகா, விவேக் நடித்த
பூவெல்லாம் உன் வாசம்
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2, 5(பு.நே.)


## கண்ணீர் அஞ்சலி



எமது அன்பு நண்பர்
*திரு.த.மணிவண்ணன*
அவர்களின் அன்புத் தாயாரும்,
செல்வன்
**கணேஸ் குபேந்திரன்**
அவர்களின் பாசமிகு பேர்த்தியாருமாகிய
திருமதி
**தம்பிப்பிள்ளை கனகம்மா**

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
*உரிமையாளரும், ஊழியர்களும்*

சாரங்கா நகைமாடம் ,
*177/4, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர்,
*45, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்*

அருள் முருகன் நகையகம்,
*96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
(C/20754)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தம்பிப்பிள்ளை கனகம்மா

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை கனகம்மா 09.02.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு தம்பிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தெய்வகடாட்சம், பத்மநாதன், தனபாலசிங்கம், குகதாசன் (சுகாதார திணைக்களம்), தனபாக்கியலட்சுமி, காலஞ்சென்ற தவராசா, மணிவண்ணன் (ஸ்ரீமுருகன் ஜுவல்லறி), சடாட்சரம் (கனடா), சீராளன் (பிரான்ஸ்), புஸ்பவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகதாம்பாள், நாகேஸ்வரி, சிவயோகேஸ்வரி, கணேஸ், புஸ்பராணி சைலஜா, சிவலோகராணி (பிரான்ஸ்), பாக்கியநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், முத்துச்சாமி, அன்னபூரணம், சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.448, நாவலர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (15.02.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
த.மணிவண்ணன் (மகன்)
(ஸ்ரீமுருகன் ஜுவல்லறி)

*448, நாவலர் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்* (730)

## சண்முகம் கனகசபாபதி

நெடுந்தீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கனகசபாபதி 09.02.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கமலாவதியின் அன்புக் கணவரும், லதா, மனோ (கனடா), சுதா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஜோகன், ரஞ்சன் (உரிமையாளர், நியூ விதுஷா நகை மாடம்) ஆகியோரின் மாமனாரும், சொக்கநாதர், சபாரத்தினம், நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வட்டக்கச்சி ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S.ரஞ்சன் (மருமகன்)
(உரிமையாளர்
நியூ விதுஷா நகை மாடம்)

*341/2, கோயில் வீதி,*
*(துர்க்கா மணிமண்டபம் அருகில்)*
*நல்லூர்.* (C/20751)

## கந்தையா சுப்பிரமணியம் (மணியம்)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், தம்பாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் 11.02.2002 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் அன்னமுத்து தம்பதிகளின் ஏக புதல்வனும், பாலாமணியின் அன்புக் கணவரும், புவனேஸ்வரியின் அன்புச் சகோதரரும், செல்வச்சந்திரன், சிவகரன் (பிரான்ஸ்), அகிலச்சந்திரன், பேரின்பன், பாலசுரபி (ஜேர்மனி), அமுதசுரபி ஆகியோரின் அன்புத் தந்தையும், சரஸ்வதி, உமா (கொழும்பு), பத்மலோஜினி (கிளிநொச்சி), சிவசுந்தரம் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், டனோஜன், வினோஜன், டினோஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் 86,கலட்டி அம்மன் வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வச்சந்திரன் (மகன்)
(சுழிபுரம்)

*86, கலட்டி அம்மன் வீதி,*
*யாழ்ப்பாணம்,* (722)

## அந்தோனிப்பிள்ளை யோசேப்பு

குருநகரைப் பிறப்பிடமாகவும் 5ஆம் குறுக்குத்தெருவை தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை யோசேப்பு நேற்று (14.02.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - அந்தோனியாப்பிள்ளை தம்பதியின் மகனும், விஜயலெட்சுமியின் அன்புக் கணவரும், கிரியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான ஆசீர், வெல்லம், லூர்த்தம்மா, தங்கக்குட்டி மற்றும் முத்தம்மா ஆகியோரின் சகோதரரும், உதயமலர், காந்தரூபி, சுசிலாதேவி, டெசி மற்றும் காலஞ்சென்றவர்களான றோசாமலர், காணிக்கை, சிறில், லீயாண்டர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.02.2002) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விஜயலெட்சுமி
(மனைவி)

*5ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (727)

## எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர்
# உடன்பாடு எட்டப்படாவிட்டால்
# மோதல் தவிர்ப்பு நீடிக்கப்படும்
## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு,பெப்.15

எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகாதுவிட்டால் அரசு அறிவித்துள்ள மோதல் தவிர்ப்பு மேலும் நீடிக்கப்படும்.

அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு கூறியுள்ளார். ஜப்பானிய தலைநகர் டோக்கியோவில் கடந்த திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் இதனை அவர் தெரிவித்தார்.

உத்தேச புரிந்துணர்வு உடன்படிக்கையில் இடம்பெற்றுள்ள அம்சங்களில் இறுதிக்கட்ட மாற்றங்கள் இரவு பகலாக மேற்கொள்ளப்படுகின்றன. எதிர்வரும் 24 ஆம் திகதிக்குள் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தும் எமது முயற்சியில் வெற்றியடைய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. ஒருவேளை அதற்குள் எமது முயற்சி கைகூடாவிட்டால், மோதல் தவிர்ப்பை நீடித்து அரசு வெளியிடும் புதிய அறிவிப்பு எமக்குத் தேவையான கால அவகாசத்தைத் தரும்.

நிரந்தர சமாதான ஏற்பாட்டுக்கு இரண்டு மாத காலமாவது எடுக்கும். இரு தரப்பும் கடந்தகாலத் தவறுகளை மீண்டும் செய்வதில்லை என்பதில் உறுதியாக உள்ளன.

உதாரணமாக புதிய அரசமைப்பை ஏற்படுத்துவதற்கு முன்னர் சர்ச்சைக்குரிய விடயமான, மத்திய மற்றும் மாகாண அரசுகளுக்கிடையேயான அதிகாரப் பகிர்வு குறித்து அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் விரிவாகப் பேச்சு நடத்தும்.

- இவ்வாறு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார். (ஒ)

### மூதூர் காயிதா நகரில் பதற்றம்!

திருகோணமலை,பெப்.15

திருகோணமலை மாவட்டத்தில் மூதூரில் மூன்று முஸ்லிம்கள் நேற்று முன்தினம் இரவு கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டபின் விடுவிக்கப்பட்டதை அடுத்து - மூதூர் காயிதா நகரில் நேற்றுப் பதற்றமான சூழ்நிலை நிலவியது.

காயிதாநகருக்கு நேற்றுமுன்தினம் இரவு வந்த இனந்தெரியாத குழுவினர் அங்கு சிலரைத் தாக்கிவிட்டு அங்கிருந்து மூவரைக் கடத்திச் சென்றனர். அவர்கள் மூவரும் நேற்றுக்காலை தாக்கப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் மூதூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் திருகோணமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து அங்கு நேற்றுக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அங்கு ஏற்பட்ட பதற்ற நிலையை அடுத்து சில குடும்பங்கள் இடம்பெயர்ந்து புனித அந்தோனியார் ஆலயத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

பதற்ற நிலையைத் தணிக்க விசேட பொலீஸார் அங்கு அனுப்பப்பட்டுள்ளனர். (ஐ-3-8)

### சட்டமா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வவுனியா சிதம்பரபுரம் அகதி முகாம் பொறுப்பதிகாரி, வவுனியா அரச அதிபர் உட்பட ஒன்பது பேர் பிரதி வாதிகளாக மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தனர். விசாரணை மார்ச் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. (ஐ)

### தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகளில் கூடிய சில கும்பல்கள் வன்செயல்களில் ஈடுபட்டதாகவும் - கூறப்படுகிறது.

பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை ஏவி கூட்டத்தைக் கலைத்து அமைதியை நிலைநாட்டினர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் நேற்று மாலை விடுத்த ஓர் அறிவிப்பில், தமிழ் - முஸ்லிம் சகோதரர்களிடையே மோதலைத் தூண்டும் ஒரு முயற்சி இது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்களின் சூத்திரதாரிகள் இனங்காணப்படும் வரை இருதரப்பினரும் அமைதிகாக்க வேண்டும் என்றும் புலிகள் கோரியுள்ளனர். (ஐ-3)

### எம்.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய சாட்சிகள் சாட்சியம் அளிக்க விருப்பதால், அன்றைய தினம் நீதிமன்றத்தில் பிரசன்னமாகி இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவரை அழைத்துச் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

சிறைக்காவலர்கள் நாளை இவரைக் கொழும்புக்கு அழைத்துச் செல்லவுள்ளனர்.

(ஐ-3-10-180)

### புரிந்துணர்வு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் பல விடயங்கள் விவாதிக்கப்பட வேண்டியவை என்றும் -

தென்னிலங்கையில் இருந்து அறிக்கைகள் வெளிவந்தன. இந்தச் சமயத்தில் வடக்குக்கான தரை வழிப்பாதை திறத்தல், யுத்தநிறுத்தத்தை கண்காணிக்க ஸ்கண்டிநேவிய கண்காணிப்பாளர்களை அழைத்தல் ஆகியவை உடன்படிக்கையில் இடம்பெறக் கூடிய விடயங்களாக உள்ளூர் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன.

உடன்படிக்கையின் உள்ளீட்டை 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை விலாவாரியாக எழுதியது.

அடுத்தசில நாள்களில் தேசிய இணைப்புக்குழு, பௌத்தசிங்கள அமைப்புகளின் கூட்டமைப்பு, ஜே.வி.பி. என்ற பல அமைப்புகளும் உடன்படிக்கைக்குத் தமது எதிர்ப்பை வெளியிட்டன. இலங்கை உட்பட சில நாடுகளில் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்புக்கு சம அந்தஸ்து வழங்கும் அந்த உடன்படிக்கையை நிராகரிக்க வேண்டும் என்று அவை கோரின.

ஆள்களை திரட்டுவதற்கும், அரசியல் ரீதியாக செயற்படுவதற்கும், கடல் வழியாக ஆயுதங்களைத் தருவிப்பதற்கும் இந்த உடன்படிக்கை விடுதலைப் புலிகளுக்கு வழியேற்படுத்திக் கொடுப்பதாக அந்த அமைப்புகள் குற்றஞ்சாட்டின.

உடன்படிக்கையின் நகல் வரைவு குறித்த தகவல்கள் கசிந்தமை தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கவலை வெளியிட்டுள்ளார். உத்தேச உடன்படிக்கையின் 3பிரதிகள் தன்னிடம் மட்டும் தரப்பட்டதாக அவர் கூறினார்.

அவற்றில் ஒன்றைத் தான் வைத்திருப்பதாகவும் -

சமாதான நடவடிக்கையில் ஈடுபடும் 'கபினெட்' அமைச்சர் ஒருவரிடமும், தகவல்களை வெளிவிடாத - அமைதிப்பேச்சுகளை கையாளுகின்ற - செயலகத்தின் இராஜதந்திரி ஒருவரிடமும் மற்றைய இரு பிரதிகளும் வழங்கப்பட்டதாகவும் -

பிரதமர் தெரிவித்தார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பான தகவல்கள் கசிந்ததால் உருவாகியுள்ள எதிர்மறையான நிலைமை குறித்து பிரதமர் ரணில், றோயல் கல்லூரியில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் பேசிய போது தெரிவித்திருந்தார். (ஒ)

## வன்னிக்கு விஜயம் செய்ய அமைச்சர் ஆறுமுகம் விருப்பம்

கொழும்பு,பெப்.15

வன்னியில் புனர்வாழ்வு, அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அனுமதி வழங்கினால் அங்கு சென்று அவருடன் ஆலோசனை நடத்தி அந்தப் பணிகளை மேற்கொள்வேன்.

இப்படிக் கூறியுள்ளார் வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான்.

திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அந்த மாவட்டங்களில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள ஆறுமுகம் தொண்டமான் நடவடிக்கை எடுத்திருந்தார்.

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலும் இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த அவர் விருப்பம் தெரிவித்துள்ளார். (ஐ-3)

## கப்பம் வாங்கியவர் சிக்கினார்!

திருக்கோவில் பகுதியில் புலிகளின் பெயரைக் கூறி கப்பம் பெற வந்த ஒருவர் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினரிடம் சிக்கினார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

கடந்த திங்களன்று திருக்கோவில மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்கு வந்த ஒரு நபர் தன்னை புலி என்று கூறி பணம் வசூலித்துத் தரும்படி கோரினார். அதிபரோ 3 நாள்களின் பின்பு வாருங்கள்' என்று கூறினார்.

குறிப்பிட்ட நபர் பாடசாலைக்கு கடந்த புதன்கிழமை மீண்டும் வந்து பிரதி அதிபரோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டபோது ஏற்கனவே தகவல் கிடைத்திருந்ததால் அங்கு காத்திருந்த புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் கையும்மெய்யுமாக அந்த நபரை கைது செய்து மேலதிக விசாரணைக்காக பழுகாமத்துக்கு அனுப்பிவைத்தனர்

(ஐ)

### எச்சரிக்கையுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலுவைக் கொண்டுள்ளதா சட்டத்தின் பரிந்துரைகள் அதில் அடங்கி உள்ளனவா என்பதாகும்.

அடுத்தது இந்த உடன்பாடு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அத்தியாவசியமானதுதானா என்பது இவற்றை முதலில் அறிய வேண்டும். ஏனைய தமிழ்க் குழுக்களின் பாதுகாப்புக் குறித்தும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

உடன்பாட்டில் கைச்சாத்திடுவதற்கான நேரம் இன்னும் வரவில்லை. அந்த நேரம் வரும்போது அது குறித்துச் சாதகமாகப் பரிசீலிக்கலாம் - என்றார் அவர். (ஐ-3-8)

### அத்துருகிரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒளிந்து இருந்ததாகப் பரபரப்பான தகவல் முதலில் வெளியாகியது. ஆனால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஆழ ஊடுருவி துணிச்சலான தாக்குதல்களை நடத்தும் இராணுவத்தின் ஒரு விசேட பிரிவைச் சேர்ந்தவர்களே அங்கு கைது செய்யப்பட்டதாகவும் -

புலிகளின பகுதிக்குள் ஆழ ஊடுருவித் தாக்குதல் நடத்துவற்கான திட்டத்துடன் ஆயுதங்களை அவர்கள் அந்த வீட்டில் சேகரித்து வைத்திருந்ததாகவும் -

பின்னர் தகவல் வெளியாகியிருந்தது.

கைதான 6 படையினரும், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் உத்தரவின்பேரில் தற்போது விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

(ஐ-3-9)


கணக்கீடு
AL/ 2003
பங்குடமை
ஆரம்பம்: நாளை 3.00 p.m.
வழமையான நேரம்
சனி, ஞாயிறு, திங்கள் 3.00 p.m.
AL/ 2004
கணக்கீட்டு அடிப்படை
ஆரம்பம்: நாளை 2.00 p.m.
வழமையான நேரம்
சனி, ஞாயிறு, 2.00 p.m.
ஆசிரியர் S.தவா
B.Com.(Hons) (Acc. Spl.)
NEW SCIENCE COLLEGE
JAFFNA
(725)

கணக்கீடு
கிரயக் கணக்கீடு
A/L 2002/DAY
ஆசிரியர் S.தவா
B.Com.(Hons) (Acc. Spl.)
ஆரம்பம்: நாளை 8.30 a.m.
நிரு கல்வி நிலையம்
கோண்டாவில்
(726)

யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
வருடாந்த இல்ல
மெய்வல்லுநர் போட்டி - 2002
காலம் : இன்று (15-02-2002) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணி
இடம் : உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானம்
தலைமை: திரு.க.கனகராசா (அதிபர்) அவர்கள்
பிரதமவிருந்தினர்: திரு.கா.சந்திரபாலன் அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர் தெல்லிப்பழைக் கோட்டம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
வயாவிளான் ம.ம.வி.
உரும்பிராய்.
- பாடசாலைச் சமூகம்.
(C/20729)

D.C.M
G.A.Q : I[st]. IN . COM
2001 ஆண்டுக்கான பரீட்சையை மையமாகக் கொண்ட ENGLISH PAPER CLASS
திரு.ஜெயக்குமார் ஆரம்பம்:16-02-02 சனி 2.00 மணி

BRIGHTMAN
பிறவுண் வீதி. நீராவியடி. யாழ்நகர்.
புதிய பிரிவு
சரளமாக உரையாட
சிங்களம்
By:
லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்:
16.02.2002 sat. 2.30 p.m (703)


## பிரிவுத் துயர்



'உதயன்' அச்சு இயந்திரப் பிரிவில் கடமையாற்றும் கந்ததயா விஜயகாந்தனின் அன்புத் தந்தையார்.

**ஐயாத்துரை கந்தையா**
**(பப்பா)**

அவர்கள் காலமாகிய செய்திகேட்டு துயருறுகின்றோம். தந்தையின் பிரிவால் வாடிநிற்கும் நண்பனுக்கும், அவர்தம் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சக பணியாளர்கள்
'உதயன்' பணிமனை,யாழ்ப்பாணம்.
(C/20756)


நியூ சயன்ஸ் கோல்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
முக்கிய அறிவித்தல்
எமது கல்வி நிறுவனத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த 2003 A/L, 2004 A/L வகுப்புகள் யாவும் 15-02-2002 வெள்ளிக்கிழமைமுதல் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ளன.
2002 ஏப்ரலில் நடைபெறவுள்ள பரீட்சையை முன்னிட்டு 2002 A/L, Day Class ஆகிய வகுப்புகள் மட்டுமே வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும் என்பதை பெற்றோருக்கும், மாணவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.
நிர்வாகி,
ஆசிரியர்கள்.
(731)

MCS
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
இணையமொழி
ஜாவா
JAVA
புதிய பிரிவு. ஆரம்பம் 16-02-2002


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.